# சுதந்திரப் பறவைகள்

பறவை 09 பாடல் 11 1995 ஆனி அன்பளிப்பு ரூபா 5.00

# உலகப் பத்திரிகையாளர்களைக் கவரும் விடுதலைப் புலிகள் பெண் போராளிகள்

அண்மைக்காலமாக தமிழீழத்தை நோக்கி வெளிநாட்டுப்பத்திரிகை நிருபர்களின் படையெடுப்புகளும் உலகின் முக்கிய ஒலிபரப்பு நிலையங்களின் செய்தியாளர் வருகையும் அதிகரித்துள்ளது. சில நாட்களுக்குமுன்னிருந்த யுத்தநிறுத்த சூழ்நிலையில் பல நூற்றுக்கணக்கான வெளிநாடுகளைச்சேர்ந்த செய்தியாளர்கள் தமிழீழத்துக்குவந்து, இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தும் பதிவுசெய்துகொண்டும் சென்றனர். இவர்கள் தமிழீழ மக்களின் வாழ்க்கை நிலை, தமிழீழ விடுதலைப்போராட்டம் என்பவற்றை அறிய மிக்க ஆவலுற்றவர்களாகக் காணப்பட்டனர்.

உலகின் பல நாடுகளில் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன அடக்கு முறைகளும் ஒடுக்கு முறைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போது அதற்கு ஆளாகி அல்லற்பட்டுக்கொண்டிருக்கின்ற மக்கள் நீதிகேட்டு தங்கள் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

அந்த வகையில் உலக நாடுகளிடையே உன்னதமான போராட்டமாகக் கணிக்கப்படும் தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகுந்த வளர்ச்சிகண்டு உலகின் கண்களை ஈர்த்துள்ளது.

இப்போராட்டத்தின் தன்மைகளை இவற்றில் ஈடுபட்டுள்ளவர்களை நேரிற்காண வேண்டும் என்று உலகின் பலபகுதிகளிலிருந்தும் செய்தியாளர்கள் வந்தவண்ணமிருந்தனர்.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால் இங்கு வருகின்ற அனைவரும் இங்கு நடக்கின்ற உன்னதமான விடுதலைப்போராட்டம் பற்றியும் அவற்றுள்ளும் குறிப்பாக பெண்கள் போராட்டத்தில் பங்கெடுக்கின்ற நிலைமைபற்றியும் துருவித் துருவி கேட்டறிந்து செல்கின்றனர். இங்கு வருகைதந்த செய்தியாளர்கள் அனைவரும் பெண்போராளிகளைச் சந்திக்க வேண்டும் என்று மிக்க ஆர்வம் கொண்டிருக்கின்றனர்.

பெண்களின் அதிசயிக்கத்தக்க வளர்ச்சியையும் செயற்பாடுகளையும் கண்டு வியப்படைந்தனர். ஆசிய பண்பாட்டு மரபிலிருந்தும் அவற்றுள்ளும் இறுக்கமான எமது சமூக மரபிலிருந்தும் எவ்வாறு இவர்கள் விடுபடத் துணிகின்றார்கள், அதற்கான உத்வேகம் அடைந்தார்கள் என்பது தங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிப்பதாகக் கூறியுள்ளனர்.

குறிப்பாக எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலுமே காணமுடியாதவாறு ஆண்களுக்குச் சமமாக எல்லாத்துறைகளிலுமே பெண் போராளிகள் செயலாற்றுவது தம்மை வியக்க வைக்கிறதாகவும் இது இந்தப் போராட்டத்தில் முக்கிய சிறப்பாகவும் அமைகிறது எனவும் கொரியப் பத்திரிகை ஒன்றின் நிருபர் குறிப்பிட்டார்.

இங்குள்ள கரும்புலிகளின் ஈகங்கள், தற்கொடைகள் ஓர் உன்னதமான, சாதாரண மனித எல்லைக்கு அப்பாற்பட்ட சாதனையாக உள்ளது என்றும் இவற்றுள்ளே பெண்கரும்புலிகளின் செயற்பாடுகள் மிகப் பெரிய வளர்ச்சியாக உள்ளது என்றும் குறிப்பிட்டனர்.

அதாவது இந்தப் போராட்டத்தின் கடினமான பயிற்சிகளையும் கடினமான வாழ்க்கை முறைகளையும் தாங்குகின்ற ஆத்மசக்தி அவர்களுக்கு எங்கிருந்து வந்தது என்றும் ஆச்சரியப்பட்ட ஒரு நிருபர், பெண்கள் எவற்றின் மீதும் தீவிர பக்தி வைத்துச் செயலாற்றுவார்கள் என்றும் குறிப்பிட்டார். மற்றும் வெளிநாட்டுப் போராட்டங்களைப் போலல்லாது இங்கு பெண்களின் செயற்பாடுகள் முன்னுதாரணமாக அமைவதோடு இங்கு பெண்கள் போராட்டத்தில் வீரச்சாவடைகின்ற வீதமானது உலகநாடுகளில் ஏனைய போராட்டங்களில் பெண்களின் வீரச்சாவு வீதத்தைக் காட்டிலும் கூடுதலாக உள்ளது என்றும் குறிப்பிட்டனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக இப்போராட்டத்தின் மூலம் வெளியேயுள்ள பெண்களின் வாழ்க்கை நிலை என்பது குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைக் கண்டுள்ளதாக ஒரு பெண் நிருபர் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பதினேழு வருடங்களுக்கு முன் தான் இதழியல் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தசமயம் ஒரு சுற்றுலாவில் யாழ்ப்பாணம் வந்தபோது அப்போதிருந்த யாழ்ப்பாணப் பெண்களின்

(2 ஆம் பக்கம் பார்க்க)



உள்ளே-

★ உழைப்போம் உயர்வோம்!
★ பொருளாதார பலத்தைப் பெண்கள் பேண வேண்டும்
★ சீதனத் தடைச் சட்டம்
★ ஏன் .. எதற்காக ... இப்படி .. ?
★ அக்கரைக் கனவுகள்
★ இன்னும் எத்தனை நாள் துயின்றிருப்பாய்?
★ வெற்றிகளை நோக்கிச் செல்லும் வீராங்கனைகள்
★ தேர்வு உங்களுக்கானதே.

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடு

எங்கள் பார்வையில்...

# தாயகத்தை காக்கும் பணியில் அனைவரும் இணையவேண்டும்

எல்லையில் எதிரி வந்து குவிந்துவிட்டான். நமது தாயகப் பகுதியெங்கும் ஊடுருவி எம் வீட்டு வாசல்களைத் தட்டித் திறக்கப் போகும் எதிரி, எம்முடைய அன்புக்குரிய விருந்தாளியாக நடந்து கொள்ளப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம். முன்னைய பல சம்பவங்களும், இப்போதும் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் நடந்து கொண்டிருக்கும் ஏராளமான சம்பவங்களும் எமக்கு இதை உணர்த்தியிருக்கின்றன. தெரியாத்தனமாகத் தவறு செய்யலாம். தெரிந்துகொண்டும் செய்யலாமா? நமது தவறுகளால் ஏற்படப்போகும் பாரதூரமான பின்விளைவுகள் நம் நாட்டின் வளமான எதிர்காலத்தையே பின்தள்ளிவிடும் என்பது மட்டும் நிச்சயம்.

நீண்ட கனவுகளுடன் க. பொ. த(சா/த), க.பொ. த (உ/த) பரீட்சைகளுக்காக இரவு, பகலாகத் தீவிரமாகப் படிக்கும் எங்கள் வாரிசுகளின் எதிர்காலம் இருளாகப் போவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியுமா? தன் படையெடுப்பால் எதிரி அழிக்க நினைப்பது வெறுமனே நமது தாயகபூமியின் விளைநிலங்களையும் குடிமனைகளையும் மட்டுமல்ல. தமிழரின் இரத்தத்தோடு கலந்துவிட்ட பெருஞ்செல்வமான கல்வியையும்தான். கல்வியை அழித்து - தமிழரின் அறிவை அழித்து - அப்படியே விடுதலை உணர்வையும் அழித்து – தமிழரை ஒரு அடிமைக் குழுவாக மாற்றுவது எதிரியின் நோக்கங்களில் ஒன்று. அடிமைத்தனத்தில் மூழ்கிக்கிடக்கும் மக்களால் எந்த ஆளும் சக்திக்குமே அச்சுறுத்தல் இராது. அதுமட்டுமல்ல, யார் ஆண்டாலும் அந்த மக்கள் கட்டுப்பட்டு நடப்பார்கள். ஆட்சியாளர்களின் சின்னச் சின்னச் சலுகைகளையெல்லாம் பெரிதாக நினைத்து, அவர்களுக்கு விசுவாசமாக நடப்பார்கள்.

இதை ஏற்கனவே இலங்கை இராணுவம் பல தடவைகள் செய்ய முனைந்திருக்கின்றது. தான் ஆக்கிரமித்த இடங்களிலுள்ள தமிழர்களுக்கு பாரிய தீங்குகளைச் செய்துவிட்டு, பின்னர் அவர்கள்மேல் அன்புகொண்டு உதவுவது போல் நடக்கமுனைவார்கள். அன்பாகப் பேசுவார்கள். அரிசியும் பருப்பும் இலவசமாகக் கொடுப்பார்கள். ஆனால் எப்போதும் தமது கத்தியை தமிழரின் கழுத்திலேயே வைத்திருப்பார்கள். தமிழர்களிடம் இயல்பாகவே உள்ள வீரமும் விடுதலை உணர்வும் இந்தச் சின்னச் சின்னச் சலுகைகளுக்கெல்லாம் பணிந்து போனதில்லை. எனினும் பெரும் எண்ணிக்கையில் எதிரிகள் இருக்கும் இடத்தில் மக்களின் வாழ்க்கை நிலை பாதிப்படைவதைத் தடுக்கமுடியாமல் போய்விடும்.

இப்போது தென்தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் நடந்துகொண்டிருக்கும் சம்பவங்களைத் தெரிந்துகொண்டால், இனிமேல் இராணுவம் ஊடுருவும் பகுதிகளில் என்ன நடக்கும் என்பது தெரியும். 1990க்குப் பிற்பட்ட காலத்தில் தென் தமிழீழத்தில் பல பெண்கள் இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்கள் யாராலும் சற்றும் எதிர்பார்க்காத நேரங்களில், எதிர்பார்க்காத இடங்களில்தான் நடந்தன. பாடசாலைக்குப் போய்க்கொண்டிருந்த மாணவிகள் சீருடைகளுடனும் புத்தகப் பைகளுடனும் இராணுவ முகாமுக்குள் அழைத்துச் செல்லப்பட்டனர். பெற்றோர்கள் போய்க் கேட்டபோது, விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், விசாரணை முடிந்த பின் விடுதலை செய்யப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. நாலைந்து நாட்களின் பின் விடுவிக்கப்பட்ட மாணவிகள் யாவருமே பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டிருந்தனர்.

இரவு நேரங்களில் இராணுவ நடவடிக்கைக்குப் பயத்தில் அந்தக் கிராமத்துப் பெண்கள் எல்லோருமே தேவாலயத்தில் தங்கினார்கள். ஆண்கள் அருகிலுள்ள காடுகளுக்குள் மறைந்திருந்தனர். ஒரு நாள் இரவு நல்ல குடிவெறியில் தேவாலயத்துள் புகுந்த இராணுவம் அங்கிருந்த இளம் பெண்கள், தாய்மார்கள் அனைவரையுமே பாலியல் வன்முறைக்குள்ளாக்கியது.

வீதியில் மிதிவண்டியில் கணவனுடன் போய்க்கொண்டிருந்த இளம் மனைவியைத் தடுத்து நிறுத்திவிட்டு கணவனைப்போகுமாறு அனுப்பியதுஇராணுவம். தமது தேவை தீர்ந்தபின்னர் அந்தப் பெண்ணை விடுதலை செய்தது.

இப்படித்தான் இன்று தென்தமிழீழம் வாழநிர்ப்பந்திக்கப்படுகின்றது. தம் உயிரையும் மானத்தையும் கையில் பிடித்தவாறு அந்த மக்கள் வாழ்கின்றனர். இளம் பெண்களும் வாலிபர்களும் படிப்பதற்காகக்கூட வெளியில் போக முடியாமல்வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர்.

தென் தமிழீழம்போல வட தமிழீழத்தையும் ஆக்குவதற்காகத்தான் சிறீலங்கா அரசும் இராணுவமும் இந்தப் பாடுபடுகின்றன. அப்படியொரு இருண்டநிலையை வராமல் தடுப்பது தமிழ் இளம் பெண்களினதும் இளைஞர்களினதும் கையில்தான் இருக்கிறது. வடதமிழீழத்துக்கு வரவிருக்கும் ஆபத்தை நீக்கி, தென்தமிழீழத்தை மீட்டெடுக்க ஒவ்வொருவரும் உறுதி பூணவேண்டும். நமது இளைய தலைமுறையினர் ஒவ்வொருவரும் தமது முழுப் பலத்தையும் பயன்படுத்தி தாயகத்தைக் காக்கும் பணியில் இறங்க வேண்டும்.

---

பெண்கள் இன்று மருத்துவம், பொறியியல், கட்டுமானப் பணி, தொழிற்சாலை, காவல் என அனைத்துத் துறைகளிலும் புகுந்து பணியாற்றி இடங்களைக் கைப்பற்றி வருகின்றார்கள். இவர்களின் பணிகளுக்கேற்ப ஆடை வடிவம் அமைவது சிரமம். இதைத் தீர்த்து, அவர்கள் விரும்பும்படி ஆடைகளை அமைத்தால் என்ன என்று எண்ணினார் அமெரிக்காவைச் சேர்ந்த ரெபக்கா மத்தியாஸ் என்ற பெண்.

அவரது எண்ணத்தின் விளைவுதான் 'Mothers work'. 1983 இல் ஆரம்பித்து இன்று நாற்று முப்பத்தைந்து கடைகளுக்கு உரிமையாளராக விளங்கும் நாற்பது வயது ரெபக்காவின் ஒரே தாரகமந்திரம். 'வேகம்' இதன் ஆண்டுக்குரிய வியாபார மதிப்பு 5 கோடி 60 லட்சம் அமெரிக்க டொலர். தனது இலட்சியம் 100 கோடி என்கிறார் ரெபக்கா.

**உலகப்...**

நிலைக்கும் தற்பொழுதுள்ள பெண்களின் நிலைக்கும் இடையில் குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழ்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். தான் இங்கு வந்த போது பெண்களை யாழ்ப்பாணத்தில் தனியே காண முடியாது, ஒரு பெண் தனது பெற்றோருடனோ அன்றி சகோதரனுடனோதான்செல்லுகின்ற நிலையைத்தான் பார்த்ததாகவும் இப்போதுள்ள முன்னேற்றம் மூக்கில் விரலை வைக்கத் தோன்றுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒட்டுமொத்தமாக இதிலிருந்து எமது போராட்டத்தின் செயற்பாடும் பெண் போராளிகளின் சாதனைகளும், பெண்களின் வாழ்க்கை முறைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்திசமுதாய வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளது என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

வாசகர்களிடமிருந்து கருத்துக்களை வரவேற்கிறோம்

தொடர்புகளுக்கு

**சுதந்திரப்பறவைகள்,**
**வெளியீட்டுப்பிரிவு,**
**கோண்டாவில்.**

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

நம் வாழ்வில் பொருளாதார ரீதியான நெருக்கடிகளை தொடர்ச்சியாகச் சந்தித்துவரும் பெண்களால் தாம் உழைக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக நடுத்தரத்துக்குக் கீழ்ப் பட்ட வர்க்கத்துப் பெண்கள் வருமானமீட்டும் தொழில்களில் ஈடுபடத் தயங்குவதில்லை. அவர்கள் குடும்ப கௌரவம், போலி மரியாதையெல்லாம் பாராமல் இயல்பாக வாழுவதால்அவர்கள் விருப்பத்துடன் தொழில்களில் ஈடுபடுகின்றார்கள். இவர்களது இந்த இயல்பைவேறு சிலர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, தமது எடுபிடி வேலைகளுக்கும், வீட்டு வேலைகளுக்குமாக வைத்துக்கொள்வதுமுண்டு. ஆனால் தம்முடைய குடும்பத்து நன்மை, தீமைகளில் அவர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. தாழ்த்தப்பட்ட ஒரு சமூகமாகவே தள்ளி வைத்துவிடுவர்.

அந்தச் சமூகத்துப் பெண்களில் சிலர் இப்போது மாநகரசபையின் வீதி கூட்டும் பணியாளர்களாகக் கடமையாற்றிவருகின்றனர். அவர்களை நாம் சந்தித்தோம். நாங்கள் சந்தித்த பெண்கள், யாழ், மாநகரசபை எல்லையினுள் வீதி கூட்டும் பெண்கள். இவர்களின் குடியிருப்பு குருநகருக்கு அண்மையில் உள்ளது. அதற்குத் திருநகர் என்று பெயர். குடிசைகள் மிக நெருக்கமாக அமைந்துள்ளன. கிணறு, மலசலகூட வசதிகள் பெரியளவில் இக்குடியிருப்புக்குக் கிடை



குறிப்பாக நடுத்தரத்துக்குக் கீழ்ப்பட்ட வர்க்கத்துப் பெண்கள் வருமானமீட்டும் தொழில்களில் ஈடுபடத் தயங்குவதில்லை. அவர்கள் குடும்ப கௌரவம், போலி மரியாதை எல்லாம் பாராமல் இயல்பாக வாழுவதால் அவர்கள் விருப்பத்துடன் தொழில்களில் ஈடுபடுகிறார்கள்

# உழைப்போம் உயர்வோம்!

யாது. நாகரிக வாழ்வின் எந்த அம்சங்களும் இக்குடியிருப்பினுள் தம் காலை வைக்கவில்லை. பெரியளவில் கல்வியில்' ஈடுபாடு இல்லை. பெண்களின் சிறு வயதுத் திருமணங்கள் இவர்களிடையே தாராளம்.

எங்களுடன் கதைத்த பெண்களில் ஒருவருக்கு ஒரு குழந்தை உண்டு. குழந்தை ஐந்து மாதக்கருவாக இருந்தபோது கணவர் பிரிந்து சென்று வேறு திருமணம் செய்துவிட்டார். குடும்பக் கஷ்டத்தால்தான் தான் வேலைக்கு வந்ததாக அவர் கூறினார்:

மாநகர சபையால் பத்திரிகையில் வேலை வாய்ப்புக்காக விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது. அந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு இவர்கள் நேர்முகத் தேர்வுக்குப் போனார்கள். எல்லா வேலைகளையுமே செய்யும் மனோநிலை இவர்களுக்கு இருக்கின்றதா என்று ஆராயப்பட்ட பின்னரே வேலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். எடுத்துக்காட்டாக ஆண் ஊழியர்கள் வராத நாட்களில் வைத்தியசாலைக்குச் சென்று மலசலகூடங்களைக் கழுவுவதற்கு அவர்கள் ஒப்புக்கொண்ட பின்னரே வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

தான் இந்த வேலையில் 1968 இல் இணைந்ததாகவும் இருபத்தைந்து வருடம் சேவையாற்றியபின் இப்போது ஒய்வூதியம் பெற்று வருவதாகவும், ஒரு அம்மா குறிப்பிட்டார். அவருடைய மகள் இப்போது வீதி கூட்டும் வேலை செய்கின்றார். தாய்வேலை செய்ததால் மகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

அன்றைய நாட்களில் வீதியில் ஒரு பெண் நின்று கூட்டுவதில் இருந்த இடர்களைப் பற்றி அந்தத் தாய் சொன்னார்.

''நாள் ஒன்றுக்குரிய சம்பளமாக ரூபா 5.28 தருவார்கள். நாங்கள் கூட்டிக்கொண்டிருக்கும் போது இளைஞர்கள் கல்லால் எறிவார்கள். கேலி செய்வார்கள். எங்களுடைய மேற்பார்வையாளர்கள்கூட ஏதும் பிழை என்றால் கெட்ட வார்த்தைகளால் ஏசுவார்கள். இப்போது போராளிகள் இருப்பதால் அப்படி ஒரு பிரச்சினையும் இல்லை''

என்றார்.

இத் தொழிலில் ஈடுபடும் பெண்கள் இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். மூன்று வருடத்துக்குட்பட்ட சேவையில் ஈடுபடுபவர்கள் தற்காலிகமான ஊழியர்கள். மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட சேவையில் ஈடுபடுபவர்கள் நிரந்தர ஊழியர்கள். தற்காலிக ஊழியர்களுக்ளுக்கு மஞ்சள் நிறச் சேலையும், நிரந்தர ஊழியர்களுக்கு நீல நிறச் சேலையும் வழங்கப்பட்டுள்ளது. முன்னர் இப்படி இருக்கவில்லை. அண்மையில்தான் இந்த முறை நடைமுறைக்கு வந்தது

ஒரு மாதத்தில் நான்கு நாட்கள் விடுமுறை எடுக்கலாம். ஆனால் ஒவ்வொரு விடுமுறை நாளுக்கும் ரூபா 100.00 படி கழிக்கப்படும். இவர்களுக்குரிய மாதாந்த ஊதியம் ரூபா 3,000.00. ஆனால் கழிவுகள் போக பெரும்பாலும் ரூபா 2.500.00 அளவில்தான் மாதத்தில் ஊதியம் பெறுவதாகக் குறிப்பிட்டார்கள். (ஆண்களுக்கு மாதத்தில் இரண்டு நாட்கள்மட்டுமே விடுமுறை. ஆனால் ஊதியம் குறைக்கப்படுவதில்லை) வேலை நிரந்தரமாக்கப்பட்டவர்களுக்கு ரூபா 8,000.00 - ரூபா 12,000.00 வரை கடனுதவி கிடைக்கும், கடனுதவி பெற்றவர்களின் ஊதியத்திலிருந்து மாதாந்தம் ரூபா 260.00 ஐக் கழிப்பதன் மூலம் கடன் பணம் திரும்பப் பெறப்படும். மேற்கண்டவாறு அந்தப்பெண்கள் கூறினார்கள்.

திருநகரிலிருந்து ஏறத்தாழ இருபது பெண்கள் வரை வீதி கூட்டும் தொழிலில் ஈடுபடுகின்னர். யாழ். மாநகரசபை எல்லைக்குள்மட்டும் ஏறத்தாழ ஐம்பத்தினான்கு பெண்கள் வேலை செய்கின்றனர். திருநகரிலிருந்து வரும் பெண்கள் காலையில் நான்கு மணிக்கு எழும்பி தமது வீட்டுவேலைகளை முடித்துவிட்டு, ஒவ்வொரு வீட்டுப் பெண்ணையும் குரல் கொடுத்துக் கூப்பிட்டு கொட்டடிக்கு வந்து சேர காலை ஆறு மணியாகிவிடும். கொட்டடியிலுள்ள தமது அலுவலகத்தில் ஒப்பமிட்டுவிட்டு இவர்கள் வீதி கூட்ட ஆரம்பித்தால் மதியம் ஒரு மணியளவில்தான் வேலை முடியும். பத்து மணி வரையில் வேலை செய்துவிட்டு அருகிலிருக்கும் கடைகளில் வெதுப்பியோ, இனிப்பு வெதுப்பியோ வாங்கிச் சாப்பிட்டுவிட்டு, தம் வேலையைத் தொடர்வார்கள். ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏறத்தாழ மூன்று மைல் தூரம்வரை கூட்டவேண்டியிருக்கும். களைத்தால் சிறிது நேரம் சுவரோரமாகச் சாய்ந்து நின்றுவிட்டு, பின்னர் கூட்டுவார்கள். தண்ணீர், தேநீர் குடிப்பதென்றால்கூடக் கடையில்தான் குடிக்கவேண்டும். பெரியளவில் மக்கள் இவர்களுடன் அணுகுவதில்லையாதலால் மலசலகூட வசதிகூட இவர்களுக்கு இல்லை. அதனால்தான் சில நேரங்களில் தாம் விடுமுறை எடுக்கவேண்டிவருகின்றது என்கிறார்கள் இவர்கள்.

வீதி கூட்டும் விளக்குமாறுகூட இவர்கள் தம்முடைய செலவிலே தயாரிப்பதுதான். இதற்கென்று மேலதிகக் கொடுப்பனவுகள் எதுவும் இல்லை. இவ் விளக்குமாற்றை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தாங்கள் ஈர்க்கு வார்ந்து கட்டுவதாகவும், ஒரு விளக்குமாற்றுக்கு ரூபா 30. 00 செலவாவதாகவும் சொன்னார்கள். முன்பெல்லாம் விளக்குமாற்றை வீட்டிலிருந்து கொண்டு வந்து கூட்டி விட்டு, பின்னர்வேலை முடிய வீட்டுக்குக் கொண்டுபோவார்கள். இப்போது தமது அலுவலகத்தில் வைத்து, எடுக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

தற்செயலாக குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே கூட்டி முடித்து விட்டால் வீட்டுக்குப் போகமுடியாது. மேலாளர்களும் உயர் மேலாளரும் வந்து பார்க்கும் வரையில் நிற்கவேண்டும். சில நேரங்களில் கூட்டப்பட்ட இடத்தில் யாராவது குப்பை போட்டிருந்தால் அதை மீண்டும் ஒருமுறை கூட்டவேண்டிவரும். இவர்கள் கூட்டிக்குவித்த குப்பைகளை ஆண் ஊழியர்கள் வந்து அள்ளுவார்கள்.

வீதி கூட்டும் தொழிலில் தொடர்ந்து இருபது வருடம் சேவையாற்றினால் ஒய்வூதியம் கிடைக்கும். ஐம்பத்தைந்து வயதில் ஓய்வு பெறலாம். ஆனால் மேற்குறிப்பிட்ட காலச் சேவை செய்திருந்தாலே ஒய்வூதியம் பெறலாம். இவ் வேலை செய்யும் பெண்கள் அனைவருமே திருமணம் செய்த பெண்கள்தான். இவர் தமது வேலைமுடிந்து போன பின்னர் தம் வீட்டு வேலைகளைச் செய்கின்றார்கள்.

வேலை செய்வதில் ஏதாவது சிக்கல் இருக்குமா என்பதை நாம் அவர்களிடம் விசாரித்த போது.

''வேலைக்கு வந்த பின்னர் யாருக்காவது இயலாமற்போய், வீட்டுக்குப் போனால்தான் அவருடன் நின்று கூட்டியவருக்குச் சிக்கல். இவருடைய நிலத்தையும் சேர்த்து ஒருவரே கூட்ட வேண்டியிருக்கும். முன்கூட்டியே அறிவித்தால் மேலாளர்கள் ஆட்களை மாற்றிவிடுவார்கள். அப்படியில்லாவிட்டால் கஷ்டம்தான்."

இவர்களுக்கென சேலை, மழைத்தொப்பி, என்பன மாநகர சபையால் கொடுக்கப்படுகின்றன.

இவர்களின் ஊதியக் குறைப்புப்பற்றி மாநகரசபை அதிகாரிகளுடன் கதைத்தபோது அவர்கள் வேறு விதமாகக் கூறினார்கள்.

நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளிலும், மருத்துவத்துக்கும் விடப்படும் விடுமுறைக்கு கழிவில்லை. ஒரு வருடத்தில் இருபத்திநான்கு நாட்கள் விடுமுறை எடுக்கலாம். அதற்குமேல் விடுமுறை எடுத்தால்தான் சம்பளத்திலிருந்து கழிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

அதேபோல் தற்காலிக ஊழியர்கள் வருடத்தில் இருநூற்றைம்பது நாட்கள் வேலைக்கு வந்தால், அதன்பின்னர் அவர்களுக்கு விடுமுறையும் மருத்துவ விடுமுறையும் வழங்கப்படும் என்று சொன்னார்கள்.

கூட்டும் விளக்குமாறுகளை ஏன் அவரவரையே தயாரிக்கச் சொல்லப்படுகிறதென்றால், அவர்கள் தமக்கு வசதியான, இலகுவான முறையில் விளக்குமாற்றைச் செய்துகொள்ளட்டும் என்பதாலும் ,அவரவர் செலவில் தயாரிக்கும் விளக்குமாறென்றால் பாவனையில் அதிகம் கவனம் செலுத்தப்படும் என்பதாலுமே என்றும் அவர்கள் கூறினார்கள்.

(8ம் பக்கம் பார்க்க)

# பொருளாதார பலத்தை பெண்கள் பெறவேண்டும்

சென்ற இதழிலே நாம் பொருளாதார நிர்வாகம் பெண்கள் கையில் வரவேண்டும் என்றும், அதற்கு முன்னோடியாக தமிழீழ வைப்பகத்திலே ஒவ்வொரு பெண்ணும் கணக்குகளைத் தொடங்கலாம் என்றும் சொல்லியிருந்தோம். நம் நாட்டில் என்னதான் ஆண் உழைப்பவனாக இருந்தாலும், பெண் வீட்டுக்குள் இருப்பவளாக இருந்தாலும் சில சில நுட்பமான முறை மூலம் பெண்கள் ஓரளவுக்கேனும் குடும்ப பொருளாதாரத்தில் பங்கெடுத்துக் கொள்கின்றனர். கணவர்மாருக்குத் தெரிந்தும் தெரியாமலும் சீட்டுப்பிடிப்பதன் மூலம் பக்க வருமானத்தைச் சம்பாதிக்கும் பெண்கள் ஏராளம் பேர்.

பட்டி, தொட்டியிலிருந்து மாடமாளிகை, கூடகோபுரம் வரை பரவிக்கிடக்கும் இச் சீட்டுச் சாம்ராட்சியத்தின் ஆளுகை பெரும்பாலும் நம் பெண்களிடம்தான். நீண்ட காலமாகவே அவர்கள்தான் இங்கே முடிசூடா ராணிகள். ஒவ்வொரு சீட்டுக் குழுக்களின் தாய்ச்சி(தலைவி)களும் உண்மையிலேயே ஒரு ராணியைப் போலவே சகல அதிகாரங்களுடனும் விளங்குகின்றார்கள். அவரவரின் குழுவுக்கு அவர்கள் வைத்ததுதான் சட்டம். சீட்டுப் பிடிக்கும் முறைமைக்கான பொதுவான விதிமுறை என்று எதுவுமே இல்லை. அந்தந்தக் குழுவின் தலைவிகள் தம் வல்லமைக்கு ஏற்ற வகையில் எழுதாத சட்டங்களை உருவாக்கியுள்ளார்கள். அந்தச் சட்டங்களுக்கு உட்பட விரும்பினால், சீட்டுச் சேரலாம். பிடிக்காவிட்டால் விலகலாம். யாருக்காகவும் எதற்காகவும் தம் விதிமுறைகளை விட்டுக்கொடுக்க மாட்டார்கள் இந்த ராணிகள்.

இனி இவர்களின் சீட்டுப்பிடித்தல் சம்பந்தப்பட்ட சில சுவாரசியமான தகவல்களை இங்கே தருகின்றோம்.

## தொகைச் சீட்டு அல்லது கேள்விச்சீட்டு

இச் சீட்டுக்குரிய மொத்தப் பெறுமதி ரூபா 15,000.00 என வைத்துக்கொள்வோம். ஒருவருக்குரிய கட்டுக்காசு ரூபா 500.00 எனக்கொள்வோம். முப்பது உறுப்பினர்கள் என வைப்போம். முதலாவது குலுக்கலில் கிடைக்கும் பணம் கழிவு எதுவுமில்லாமல் தாய்ச்சிக்கே போகும். பின்னர் அடுத்த அடுத்த முறைகளில் சீட்டுக் குலுக்கும் நாளிலே, பங்குதாரர் அனைவரும் குழுமி நின்று கழிவு கேட்பர். யார் கூடுதலான கழிவைக் கேட்கிறாரோ அவருக்குத்தான் அம்முறை பணம் போகும்.

உ+ம்: ஒருவர் கழிவு 500.00 என இன்னொருவர் 1,000.00 என, அப்படியே படிப்படியாக ஏறி கழிவுத்தொகை 5,000.00 வரை வந்துவிட்டது. அதற்கு மேல் யாரும் கழிவு கேட்கவில்லை. ஆகவே 5,000.00 கழிவாகக் கேட்டவருக்கே பணம் கொடுக்கப்படும். கழிவுப் பணமான 5,000.00 ஐ மொத்தத் தொகையான 15,000.00 இலிருந்து கழித்தால் 10,000.00 ரூபா எஞ்சும். ஆகவே முப்பது உறுப்பினர்களுள் ஒவ்வொருவரும் 10,000/30 என்ற அளவில் பணத்தைக் கட்டுவார்கள். மொத்தக் கட்டுப் பணமான ரூ.10,000.00ஐ கழிவு கேட்ட பெண் பெற்றுக்கொள்வார். ஒவ்வொரு முறையும் கழிவாகக் கேட்கப்படும் தொகையை மொத்தக் கட்டுக் காசிலிருந்து கழிக்க வரும் தொகைதான் எல்லோராலும் பங்கிடப்பட்டு அம்முறைக்குரியவருக்கு வழங்கப்படும். கட்டுக் காசின் அளவைக் குறைப்பதற்காகத்தான் கழிவு கேட்கும் முறை கடைப்பிடிக்கப்படுகின்றது. ஒருமுறை பணம் பெற்றவர்கள் அடுத்த அடுத்த முறைகளில் கழிவு கேட்க முடியாது. ஆனால் கட்டுக்காசு கட்டவேண்டும். சுழற்சி முறையில் எல்லோருக்குமே ஒவ்வொரு தடவை பணம் கிடைக்கும்.

## குலுக்கல் சீட்டு அல்லது கட்டைச்சீட்டு.

இம் முறையில் கழிவுகள் ஒன்றும் இல்லை. ஒவ்வொருவருக்குமுரிய கட்டுக்காசு ரூபா 100.00 ஆகவும், உறுப்பினர்கள் பத்துப் பேராகவும் இருப்பின் ரூபா, 1,000.00 தான் மொத்தக்காசு ஒவ்வொரு முறையும் யாரோ ஒருவருக்கு இந்த ரூபா 1,000.00 கிடைக்கும். குலுக்கல் மூலமும் ஆளைத் தெரிவு செய்வார்கள். தாயக்கட்டைகளை உருட்டுவதன் மூலமும் ஆளைத் தெரிவு செய்வார்கள். ஒவ்வொருவரும் மூன்று முறை தாயக் கட்டையை உருட்டவேண்டும். அதில் யாருக்கு அதிக புள்ளிகள் கிடைக்கின்றதோ அவருக்குத்தான் பணம் கொடுக்கப்படும். ஒரு முறை பணம் எடுத்தவர் மறுமுறை தாயம் உருட்ட முடியாது. சுழற்சி முறையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு முறை பணம் கிடைக்கும்.

## பருவகாலச் சீட்டு அல்லது காலத்துக்கேற்ப சீட்டு.

இது ஒரு பொருளின் தேவை கருதிப் பிடிக்கப்படும் சீட்டாகும். ஒரு குடமோ, குடையோ, வேறு ஏதேனும் ஒரு பொருளோ தேவைப்படுமிடத்து, அப்பொருளுக்குரிய பெறுமதியைவிட கொஞ்சம் மேலாக மொத்தப் பணத்தைத் தீர்மானிப்பார்கள். ஒரு குடம் ரூபா 425.00 என்றால் மொத்தப் பணம் ரூபா 500.00 ஆக இருக்கும். பத்துப் பேர் சேர்ந்துகொண்டார்கள் என்றால், ஒருவர் ரூபா 50.00 கட்டவேண்டும். ஒவ்வொரு முறையும் யாருடைய பெயர் விழுகின்றதோ, அவருக்குத் தாய்ச்சி ஒரு குடம் வாங்கிக் கொடுப்பார். எஞ்சுகின்ற பணமும், முதல் சீட்டும் தாய்ச்சிக்கே. அவரவரின் பொருளாதார நிலைக்கேற்ப வாங்கும் பொருளின் பெறுமதியும் வேறுபடும். அன்றாட உழைப்பாளர்கள் பெரும்பாலும் குடம் போன்ற பெறுமதியில் ஓரளவு குறைந்த பொருட்களைத் தேர்ந்தெடுத்தாலும் வானொலி வாங்குவதற்கான சீட்டு, மிதிவண்டி வாங்குவதற்கான சீட்டு என்பன போன்று பெறுமதி மிக்க சீட்டுகளும் பிடிக்கப்படுவதுண்டு.

## நாளாந்தச் சீட்டு.

இச் சீட்டை அன்றாடம் தொழில் செய்பவர்கள் பிடிப்பார்கள். ஒவ்வொருவரும் முதல் நாள் ரூபா 1.00, இரண்டாம் நாள் ரூபா 2.00, மூன்றாம் நாள் ரூபா 3.00 என முப்பத்திரண்டு நாட்கள் காசு கட்டுவார்கள். முப்பத்திரண்டாம் நாள் ரூபா 32.00 கட்டுவார்கள், முடிவில் ஒவ்வொருவரும் ரூபா 528-00 கட்டியிருப்பார்கள். முப்பத்திரண்டாம் நாள் தாய்ச்சி ஒவ்வொருவருக்குமே ரூபா 500.00 ஐக் கொடுப்பார். ஒவ்வொருவரிடமிருந்தும் எஞ்சுகின்ற ரூபா 28.00 தாய்ச்சிக்குப் போகும் குழுவின் உறுப்பினர்கள் பத்துப் பேராக இருந்தால் முப்பத்திரண்டாம் நாள் ரூபா 5,280.00 சேர்ந்திருக்கும். உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபா 500-00 படி 5280.00 ஐ பங்கிட்ட பின் எஞ்சுகின்ற ரூபா 280.00 தாய்ச்சிக்கே. ..

## அதிர்ஷ்டச் சீட்டு

இது தாய்ச்சிக்கு பெரும் இலாபத்தை ஈட்டித் தருகின்ற ஒரு முறையாகும். இதில் உறுப்பினர்களுக்குரிய மாதாந்தக்கட்டுக்காசு ரூபா 300.00 ஆகும் ஒவ்வொருமாதமும் பெயர் விழுபவருக்குக் கொடுக்கப்படும் பணம் ரூபா 10,000.00 மட்டும்தான். உறுப்பினர்களாக ஐந்நூறுபேர்கூடச் சேரலாம். எத்தனை பேர் சேர்ந்தாலும் கட்டுக் காசு ரூபா 300.00 தான். கொடுக்கப்படும் பணம் ரூபா, 10,00.00 தான். இருநூறு உறுப்பினர்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். ஒவ்வொருவரும் ரூபா 300.00 கட்டினால் ரூபா 60,000.00 சேரும். முதல்முறை அப்பணம் தாய்ச்சிக்கே போகும். இரண்டாவது முறையும் ரூபா 60,000.00 சேரும். யாருக்கு அம்முறை சீட்டு வீழுகிறதோ அவருக்கு ரூபா 10,000.00 கொடுக்கப்படும். மிகுதியாக உள்ள ரூபா 50,000.00 உம் தாய்ச்சிக்கு இலாபமாகப்போகும். ஒரு முறை சீட்டு விழுந்தவர்கள் அதன்பின் சீட்டிலிருந்து விலகிவிடுவார்கள். தாய்ச்சிக்கு அடுத்தபடியாகச் சீட்டு விழுபவருக்கு ரூபா 9,400.00 இலாபம். (அவர் இரு முறை கட்டிய ரூபா 600.00 மட்டுமே அவருக்குச் செலவு) அப்படி ஒவ்வொருமுறை விழுபவர்களும் மறுமுறை கலந்து கொள்ள மாட்டார்கள். விரும்பினால் புதிதாகக் காசு கட்டிச் சேரலாம். இச் சீட்டில் ஒரு வரைமுறை இருக்கும். இருபது சீட்டுகள்தான் குலுக்குவது என்று முடிவெடுப்பார்கள். சிலவேளை முப்பது சீட்டாகவும் இருக்கலாம். நாம் விசாரித்த இடத்தில் முப்பத்துநான்கு சீட்டுக்கள் குலுக்குகின்றார். இருபது சீட்டென்று வைத்துக்கொண்டால் சீட்டு முடிவில் மிகுதி நூற்றெண்பது பேருக்கும் ரூபா 10,000.00 படி கொடுத்து முடிப்பார்கள். இம்முறையில் தாய்ச்சிக்கு ஏராளமான இலாபம் உண்டு.

தாய்ச்சிக்கு முதல்முறை ரூபா 60,000.00, இரண்டாம்முறை ரூபா (60,000.00 -10,000.00,)மூன்றாம் முறை ரூபா (60,000.00-10,000.00-300.00) நான்காம்முறை (60,000.00- 10,000.00 - 600.00) என்று தொடர்ந்து இலாபம் கிடைக்கும். ஒவ்வொரு தடவையும் கிடைக்கும் இலாபத்தையும் புதிய தொழிலிலோ, வைப்பகங்களிலோ முதலீடு செய்தால் ஏராளமான இலாபம் கிடைக்கும்.

நாம் இறுதியாகக் குறிப்பிட்ட அதிர்ஷ்டச்சீட்டில் பெருமளவு ஆண்கள் கலந்து கொண்டாலும், ஏனைய பெரும்பாலான சீட்டு முறைகளில் பெண்களின் கையே மேலோங்கியிருக்கின்றது. பெண்களிடம் இயல்பாகவே உள்ள ஆளுமையும் ஆற்றலும் இதுபோன்ற விடயங்களில் அவர்களுக்கு நன்றாகவே உதவுகின்றன.

ஆனால் என்னதான் இது இலாபகரமான தொழிலாக இருந்தாலும், இதில் பாதுகாப்பு இல்லை. தாய்ச்சி சில வேளைகளில் காசைச் சுருட்டி விடுகின்றார். கட்டுக்காசு கட்டவேண்டியவர்கள் தலைமறைவாகி விடுகின்றார்கள். இப்படிப் பல பிரச்சினைகள் நமது பெண்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்கு பெருமளவு உற்சாகம் குறைந்தவர்களாதலால், 'பலன் இவ்வளவுதான்' என்று விட்டுவிடுவார்கள். இப்படியிருந்தும் காவற்றுறைவரை பல முறைப்பாடுகள் வந்திருக்கின்றன. 1994-1995 ஆம் ஆண்டுகளில் மட்டும் இருநூற்றுப் பதினேழு முறைப்பாடுகள் நமது காவற்றுறைக்கு வந்துள்ளன. இவையாவும் தாய்ச்சியால் அல்லது சீட்டுச் சேர்ந்தவர்களால் உண்டான பிரச்சினைகளே. சீட்டிலே முதலிடும் தொகை ரூபா 50. 0 ஆக இருந்தாலும், ரூபா 100.00 ஆக இருந்தாலும் நமது பெண்களுக்கு அது பெரிய காசுதான். பெரியளவில் வலுவற்ற, பாதுகாப்பற்ற முறையில் அப் பணத்தை முதலிட்டு, முதலுக்கே மோசம் வருவதைவிட ஒரு சிறிய தொகையைத்தானும் அதி உச்ச பாதுகாப்பைக் கொண்ட தமிழீழ வைப்பகத்தில் முதலிட்லாம். ஒவ்வொரு பெண்ணிடமும் பொருளாதார பலம் சிறிய அளவிலேனும் வலுவாக இருக்க வேண்டும். எந்த இக்கட்டான நிலை வந்தாலும் சரிந்துபோகாத நிலையில் பொருளாதார பலத்தைப் பேணவேண்டும். எனவே நமது பெண்கள் தமது பொருளாதாரத்தை வளர்க்க எந்த முறையைப் பின்பற்றவேண்டும் என்பதைத் தெளிவாக முடிவெடுக்க வேண்டும்.

-ஜெயஜோதி-

"உடல் நலத்தையும் காத்து, அழகையும் காக்கும் சாதனங்களையும் பொருட்களையும் தயார்செய்து, அவற்றை பெண்களிடம் நேராகச் சந்தித்து விற்றால் என்ன?"

என்று எண்ணினார் ஒரு பெண். எண்ணியதை நடைமுறைப்படுத்தினார். வீட்டில் இருந்தபடியே சிறிய அளவில் விற்பனையைத்தொடக்கி, இன்று ஒரு பெரிய நிறுவனமாக வளர்த்துள்ளார் இமெல்டா ரோச்.

வர்த்தகத்தில் ஈடுபடும் அவுஸ்திரேலியப் பெண்களில் முதலிடத்தைப் பெற்றுள்ள இவர் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூபா 450 கோடிக்கு விற்பனையை மேற்கொள்கின்றார்.

"இந்தத் தொழிலில் ஈடுபடுவதுடன் என் குடும்பத்திலும் நான்கு குழந்தைகளை வளர்த்து ஆளாக்கியிருக்கின்றேன். 'திருமணம் - குடும்பம்- தொழில்- இம் மூன்றில் ஒரு பெண் ஈடுபட்டு வெற்றியுடன் திகழ முடியுமா?' என்று சந்தேகத்துடன் கேள்வி கேட்பவர்களுக்கு, முடியும்' என்று பதில் கொடுப்பதற்கு, நான் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றேன்" என்கிறார் இமெல்டா.

யாழ்ப்பாணம்
நல்லூர் பொது நூலகம்.

# சீதனத் தடைச் சட்டம்

நம் மக்களிடையே ஆழ வேரூன்றி, கிளைபரப்பி தமிழ் மக்களின் உயிர் நாடியையே ஆட்டுமளவுக்கு ''சீதனம்'' வளர்ந்துள்ளது. இந்த நாலெழுத்துச் சொல் ஆயிரக்கணக்கான இளம் பெண்கள், ஆண்களின் வாழ்க்கைக் கனவுகளைச் சிதைத்திருக்கின்றது. எத்தனையோ பேரை வாழ்வில் வெறுப்பேற்றிச் சாகடித்திருக்கின்றது. நம் மக்களின் நல்வாழ்வை தன் காலடியில் நசுக்கமுனையும் இச் சீதன அரக்கனை நசுக்கி அழிக்கும் நோக்கில், வேரோடு களையும் நோக்கில் நாம் 'சீதனத் தடைச் சட்டத்தை' நடைமுறைக்குக் கொண்டு வருகிறோம்.

எமது நீதி நிர்வாகத் துறையினரால் ஆக்கப்பட்டுள்ள இச் சட்டமானது 'சீதனத்தை' மட்டுமே தடை செய்கிறது. பெண்களுக்கான சொத்துரிமையையோ, வாரிசுகளுக்குச் சேர வேண்டிய எதையுமோ தடுக்கவில்லை. ஆனால் பெண்களின் சொத்துரிமையை மிகப் பலமாக பேணக்கூடிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

இச் சட்டத்தின்படி ஒரு பெண்ணும், ஆணும் திருமணம் செய்து வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது பெண் வீட்டார் விரும்பினால் தம் பெண்ணின் பேரில் சொத்துகளை எழுதலாம். ஆண் வீட்டார் தாம் கொடுக்க விரும்புபவற்றை தம் மகனுக்கு எழுதிக் கொடுக்கலாம். ஆண் வீட்டார் பெண் வீட்டாரிடம் கோரிப் பெறுவதோ, பெண் வீட்டார் தாமாக விரும்பியோ, விரும்பாமலோ ஆண் வீட்டாருக்குக் கொடுப்பதோ இச் சட்டப்படி கடும் தண்டனைக்குரிய குற்றமாகும். அவரவர் தம் வாரிசுகளுக்குக் கொடுக்க விரும்பியவற்றை தத்தம் வாரிசுகளின் பெயரில் மட்டும், நீதி மன்றினால் உறுதிப்படுத்தப்பட்ட பதிவாளர்கள் முன்னிலையில் பதிவு செய்வதற்கு மட்டும் இச் சட்டம் இடமளிக்கின்றது.

இனிமேல்

''இவ்வளவு சீதனம் தந்தால் தான் உங்கள் பொம்பிளப்பிள்ளையை எங்கள் மகனுக்கு முடித்து வைப்போம்''

என்று யாரும் மார் தட்ட முடியாது. நம் பெண்கள் தம்மிடம் சொத்து இருந்தால், சொத்துடன் வருவார்கள். இல்லையேல் கைகளை வீசியவாறு வருவார்கள்.

இதுவரை நாளும் பெண்வீட்டார் மணமகளின் தந்தைக்கு, தாய்க்கு, சகோதரர்களுக்கு என்று கொடுத்ததுபோல் அல்லாமல் தம் பெண்களிடம் மட்டுமே சொத்துக்களைக் கையளிப்பதுபற்றி சில தாய்மாரிடமும் தந்தைமாரிடமும் கலந்து பேசினோம். அவர்கள் எல்லோருமே பெண்ணுக்குச் சொத்துக்கள் கொடுக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள்.

*வேலணை, 59 வயது அம்மா.*

இந்த சீதனப் பிரச்சினையால்தான் எனது பெண்கள் இருவர் திருமணமில்லாமல் நிற்கின்றார்கள். கட்டாயம் பெண்களுக்குச் சொத்துக்கள் கொடுக்கப்படவேண்டும் என்பது சரி. ஆனால் கணவன் பலவந்தப்படுத்தினால் என்ன செய்வது?

*காரைநகர், 49 வயது அம்மா.*

பெண்களுக்குச் சொத்துக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் படித்த பெண்களுக்குச் சொத்தே தேவையில்லை. கணவனுக்கு ஒன்று என்றால், கணவனுடன் பிரச்சினை என்றால் தானே நின்று பிடித்துக் கொள்வார்கள். படிக்காத பெண்ணுக்குத் தான் சொத்துக்கள் கட்டாயம் கொடுக்க வேண்டும். கணவன் துன்புறுத்தினாலோ, பிரிந்தாலோ, ஏதும் பிரச்சினை என்றாலோ தன் பொருளாதார பலத்தில் நின்று கொள்ளும். ஆனால் என் பெண்களுக்கு நான் எதுவுமே கொடுக்க மாட்டேன். கொடுப்பதற்கு எதுவும் எம்மிடம் இல்லை. என்னால் இயலுமானவரை நான் அவர்களைப் படிக்கவைப்பேன். சொத்து இருந்தால் நான் எல்லாப் பிள்ளைகளுக்குமே பிரித்துக் கொடுத்துவிடுவேன்.

*வசாவிளான், 56 வயது அம்மா, ஐயா*

கணவனுக்கு இயலாமல் போகும்போது பெண்ணுக்கு இந்தச் சொத்துத்தான் உதவும். ஆனால் கணவன் கெட்டவனாக இருந்தால், இந்தப் பெண்ணின் சொத்து வீணாக அழியுமே.

*யாழ்ப்பாணம், 65 வயது அம்மா*

பெண்களுக்குத்தான் சொத்துக் கொடுக்கவேண்டும். ஆண்களுக்குத் தேவையில்லை. வருகின்ற ஒவ்வொரு பெண்ணும் தம்முடன் எதையாவது கொண்டு வருவார்கள்தானே? ஆண்கள் சீதனம் கேட்டால், வாங்கினால் அவர்களைப் பிடித்து அடைக்கக்கூடியவாறு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.

*யாழ்ப்பாணம், 45 வயது ஐயா*

எனக்கு ஆறு பெண்களும் ஒரு ஆணும். வீட்டை ஆண் பிள்ளைக்குக் கொடுப்பேன். பெண்களுக்குத் திருமணம் நடக்கின்றபோது கையில் உள்ளதைப் பிரித்துக் கொடுத்து அனுப்பிவிடுவேன். ஆனால் இந்தக் காலத்தில் படிப்புத்தான் முக்கியம். எல்லோரையுமே நான் படிக்க வைக்கிறேன். நாளைக்கு எங்காவது இடம் பெயர்ந்து போகும்போது படிப்புத்தானே கூட வரும்]

*வசாவிளான், 45 வயது ஐயா*

நமது பெண்கள் கணவன் தன்னை விட்டுப் போய்விடுவான் என்று எல்லாவற்றையும் கொடுத்துவிடுவார்கள். மன ஒற்றுமைதான் முக்கியம். என் மனைவி ஒரு அம்மிக் கல்லுடனும் நூற்றைம்பது ரூபா வளையலுடனும், ஒரு சங்கிலியுடனும் தான் வந்தார். நாங்கள் நன்றாக இருக்கவில்லையா? ஆனால் அவர் அதிக சொத்துக்களுடன் வந்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கலாம். ஆகவே நான் எனது சொத்தை என் பெண்களுக்கு மட்டும் தான் எழுதிக் கொடுப்பேன்.

*கோண்டாவில் 42 வயது அம்மா*

பெண்ணுக்கு சொத்தைக் கொடுப்பது தான் நல்லது. கணவன் சரியில்லாவிட்டால், வேறு ஏதும் பிரச்சினை என்றால் பெண் தன் காலிலேயே நிற்கலாம். பெண்ணுக்கு என்று எழுதியதை கணவன் வற்புறுத்தி வாங்க முடியாதுதானே. அப்படி வாங்கினால், நீங்கள் ஏதாவது செய்வீர்கள்தானே?

*வேலணை, 64 வயது ஐயா*

பெண் தன் சொத்தைப் பொத்தி வைக்க, ஆண் தன் சொத்தைப் பொத்தி வைக்க, பிள்ளைகள்தான் நடுத் தெருவில் நிற்க வேண்டும். பெண்ணுக்கு இது உண்மையிலேயே பெரிய பலம். ஆனால் எந்த ஆண் இதை ஏற்றுக்கொள்வான்? கணவன் தன்னை விட்டுப் போய்விடுவான் என்ற பயத்தில் பெண் தன் கணவனுக்குக் கொடுத்து, சொத்தை அழித்தால் என்ன செய்வது?

*கொக்குவில், 60 வயது அம்மா*

கணவன் மிரட்டி பெண்ணின் சொத்தைத் தன் பெயரில் எழுதுவித்தால்? 'பெண்ணைத் தரும் நீ எப்படி சொத்தை மட்டும் தராமல் இருக்கலாம்' என்று கேட்டு திருமணம் செய்ய மறுத்தால்?

இப்படி பல கருத்துக்களையும் தெரிவித்தார்கள். எல்லோரும் ஒரு விடயத்தில் தெளிவாக இருக்கவேண்டும். எந்தச் சொத்துப் பரிமாற்றமுமே நீதிமன்றின் அனுமதியுடன்தான் செய்யலாம். அது மட்டும் அல்லாமல் எந்தப் பெண்ணைத் திருமணம் செய்வதாக இருந்தாலும், அந்தப் பெண்ணின் பெயரில்தான் சொத்து எழுதப்படும். ஆகவே தன்பெயரில் பெண் வீட்டார் சொத்து தரவில்லை என்ற காரணத்துக்காக யாராலுமே திருமணம் செய்யாமல் இருக்க முடியாது. அத்துடன் பெண்கள் தமது சொத்துரிமையை பேணுவதில் திடமாக இருப்பதும் முக்கியமானது.

வெகு விரைவில் நடைமுறைக்கு வரும் இச் சீதனத் தடைச் சட்டம் பெண்கள், ஆண்கள் எல்லோருக்கும் இதுவரை காலமும் இருந்த அழுத்தங்கள், சிக்கல்கள் பலவற்றை தீர்க்க முனைகின்றது. இச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது எழும்புதிய சிக்கல்கள் காலப்போக்கில் நிவர்த்தி செய்யப்படும்.

---

## வெற்றிகளை...

றைய காலம் எம்மை வெறுத்து விளையாட்டையே பின்னடிக்க வைத்தவர்கள் இன்றைய காலம், புரிந்துகொண்டவர்களாக இந்த விளையாட்டுக்கழகத்தை பார்க்கின்றார்கள். எங்களுடைய கிளப்பில் இருந்து கொழும்புக்குக்கூட மூன்று பெண்கள் போய் வந்தார்கள். அங்கு கூட உற்சாகமாக, உறுதியுடன் எங்களுடைய அணி முன்னுக்கு வரவேண்டும் என்ற உறுதியுடன் விளையாடினார்கள். நாங்கள் இப்போது வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், எல்லே போன்ற விளையாட்டுக்களை விளையாடிக் கொண்டிருக்கின்றோம்''

என்று கூறினார்கள்.

விளையாட்டுக் கழகத்தின் பழைய உறுப்பினர் ஒருவரைச் சந்தித்தபோது அவர்,

"நான் இந்த விளையாட்டுக்கழகத்தில் இணைந்து பதினொரு வருடங்களாகின்றன. என்னுடன் ஆரம்பத்தில் இணைந்தவர்களில் சிலர் இப்ப இல்லை. இதில் பெண்களை பொறுத்தமட்டில் எவ்வளவோ எதிர்ப்புக்கள் மத்தியில் விளையாடிக்கொண்டிருக்கின்றார்கள். படிப்படியாக வளர்ந்துகொண்டு வருகின்றார்கள். புதிதாக இணையும் பெண்களை ஒரு விளையாட்டு வீராங்கனைகளாக்க வேண்டும் என்ற உத்வேகம் என்னுள் இருக்கின்றது. அவர்கள் விளையாடித் தங்களுக்கும் விளையாட்டுக் கழகத்துக்கும் பெருமை சேர்க்கவேண்டும்.

இனி வரும் ஆட்டங்களில் பெண்களை முதன்மைப்படுத்தி ஒரு பெரிய விளையாட்டு வீராங்கனைகளாக எல்லாத்திலும் வெல்ல அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பது எனது விருப்பம்".

என்றார்.

சுமதி

பறவை 09

## ஏன்...

கின்றார்கள்?

ஏன் நமது பெண்களால் தவறு செய்தவர்களுக்கு, தனக்குத் துரோகம் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்க முடிவதில்லை? தன் வாழ்வை அழிக்க நினைப்பவர்களைத் தண்டிக்காமல் ஏன் தம் வாழ்வை முடித்துக் கொள்ளவேண்டும்?

இன்னும் எத்தனை காலத்துக்கு ஒவ்வொரு பெண்ணும் தம் வாழ்வைத் தாமே நாசமாக்கப் போகிறார்கள்?

ஏன், எதற்காக, இப்படி...?

இந்தக் கேள்விகளுக்கு ஒவ்வொரு பெண்ணும் தனக்குள்ளேயே விடைகளைத் தேடிக்கொள்ளட்டும். முடிவு காணப்பட முடியாத நீண்ட கேள்விகளல்ல இவை. ஒவ்வொரு பெண்ணும் நிதானமாக யோசித்து முடிவெடுக்கவேண்டிய கேள்விகள்.

மலைமகள்

பாடல் 11

# ஏன், எதற்காக இப்படி...?

தீமைகளை எதிர்ப்பதும் அடக்குமுறைகளை உடைத்தெறிவதும் உலகிலே இயல்பான விடயங்கள். எந்த மனிதராலுமே அநியாயத்தின் கீழ், இன்னொரு ஆதிக்கத்தின் கீழ் வாழமுடியாது. 'இதுதான் வாழ்க்கை, இதற்கு மேல் ஒன்றுமே செய்ய முடியாது' என்று பணிந்து வாழ முடியாது. அப்படி யாராவது வாழுகின்றார்கள் என்று யாரும் சொன்னால் பலரும் நம்பமாட்டார்கள்; சிரிப்பார்கள்; கேலி செய்வார்கள்.

ஆனால்...

உலக மக்கள் தொகையில் பாதியான, மனிதனின் ஒரு பாதியான 'பெண்' இன்று அப்படித்தான் வாழ்ந்து (வாழவைக்கப்பட்டுக்) கொண்டிருக்கின்றாள் என்பதுதான் நடைமுறை உண்மை. அவளுக்கு சிறுமை கண்டு பொங்கத் தெரியாது. அநீதியைக் கண்டு கொதித்து எழத் தெரியாது. அடக்குமுறைக்குப் பணிந்துபோவதே தன் இயல்பு என்று நினைத்துக் கொண்டிருக்கின்றாள்.

மிக மிக நீண்ட காலத்துக்கு முன்னர் வீரமாய், விவேகமாய் இருந்த பெண்ணின் கைகள் மெல்ல மெல்லத் துண்டிக்கப்பட்டன. அவளது ஆற்றல்கள் படிப்படியாக முடக்கப்பட்டன. தேவைக்குப் பயன்படுத்தப்படும் ஒரு சிறு பொருள்தான் பெண் என்ற நிலைக்கு அவள் ஒடுக்கப்பட்டாள். அதிலிருந்து மீளவழி தெரியாத பெண்ணினமும் இதுதான் தனது வாழ்க்கை என்று தன்னை இயல்பூக்கப்படுத்திக் கொண்டது.

அதன் எச்சங்கள் இன்று எம் முன் பூதாகரமாக எழுந்து நிற்கின்றன. தம்மை அடக்குகின்றவர்களுக்கு எதிராகத் தானும் போராடாமல், போராடுபவர்களையும் விடாமல் தமது மனச் சிறைக்குள் தாமாகவே விலங்குகளைப் பூட்டியவாறு அமர்ந்திருக்கின்றனர் நமது பெண்கள்.

இதுபோன்ற பிரச்சினைகளை நாம் அண்மைக் காலமாக மிக அதிகளவில் சந்தித்துவருகின்றோம். அதிலே சிலவற்றை இங்கே குறிப்பிடுகின்றோம்.

ஒரு இளம் பெண்.

முல்லைத்தீவைச் சேர்ந்தவர்.

யாழ்ப்பாணத்து இளைஞர் ஒருவருடன் அன்புறவில் ஈடுபட்டார். என்ன காரணத்தாலோ அந்த இளைஞர் இவரைத் திருமணம் செய்யமறுத்துவிட்டார்.

அதன் பின்னர்தான் பிரச்சினையே ஆரம்பமானது. அந்தப் பெண் தன் பிரச்சினையை விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பிடம் கொண்டுவந்தார்.

அவருடைய வழக்கை ஏற்றுக்கொண்ட பெண் போராளிகள் அந்தப் பெண்ணின் நிலைப்பாட்டைக் கேட்டனர். எப்படியாவது தான் விரும்பிய இளைஞரைத் தமக்கு மணமுடித்துத் தருமாறு அவர் கேட்டார். அந்தஇளைஞரோ தான் இவரை விரும்பவே இல்லை என்று உறுதியாக நின்றார்.

இருவரும் விரும்பியதற்கு வெளிப்படையாகச் சாட்சிகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் அவர்கள் விரும்பித்தான் இருந்தார்கள் என்பதை எம்மால் உணர்ந்து கொள்ள முடிந்தது. நாம் பல தடவைகள் அந்த இளைஞரைக் கேட்டோம். இவரோ தான் விரும்பவுமில்லை, திருமணம் செய்யவும்மாட்டேன் என்று ஒரே பிடியாக இருந்தார். இந்தப் பெண்ணோ அவரைத் தனக்கு திருமணம் செய்து தருமாறு பிடிவாதமாக நின்றார்.

நமக்கோ சிக்கலான நிலைமை. இளைஞர் அந்தப் பெண்ணை விரும்பியிருக்கின்றார் என்று தெரிகின்றது. ஆனால் அதை உறுதிப்படுத்தச் சாட்சிகளில்லாததால் அவர் மறுத்துக்கொண்டேயிருந்தார். தன் மேல் விருப்பமில்லாத ஒருவரை மணமுடிப்பதால் ஒரு பெண்ணுக்கு எந்த நலனுமே இல்லை என்பதும் நமக்குத் தெரிகின்றது. ஆனால் அந்தப் பெண்ணோ அவரைத் தனக்கு எப்படியாவது திருமணம் செய்து தருமாறு நம்மை வற்புறுத்துகிறார்.

இந்த நிலைமையில் நாம் அந்தப் பெண்ணிடம் நடைமுறைப் பிரச்சினைகளை விளக்கினோம். விருப்பமேயில்லாத ஆணுடன் வாழ்வதில் உள்ள சிக்கல்களை விளக்கினோம். ஆனால் அவர் இதை ஏற்றுக்கொள்வதாயில்லை. தன்னை மணம் செய்வார் என்ற நம்பிக்கையில் அந்த இளைஞருடன் தான் பாலியல் உறவில் ஈடுபட்டதாகச் சொன்னார்.

மீண்டும் நாம் இந்த இளைஞருடன் கதைத்தோம். அவர் இதையும் மறுத்துவிட்டார். எதற்குமே வெளிப்படையான சாட்சி இல்லை.

இருவரையும் பல தடவைகள் தனியாகச் சந்தித்துக் கதைப்பதற்கு ஏற்பாடுகள் செய்தோம், அதிலும் பயன் கிடைக்கவில்லை. தத்தம் பிடிகளிலேயே இருவரும் மிகவும் இறுக்கமாக நின்றார்கள். இரண்டு வருடங்களாக மென்மையான முறையில் அணுகியும் இதற்கு ஒரு தீர்வு கிடைக்காது போகவே, நாம் சட்ட நடவடிக்கையில் இறங்கினோம்.

பிரச்சினை நீதிமன்றத்துக்குப் போயிற்று சாட்சிகள் எதுவுமற்ற நிலையில் அந்த இளைஞர் நிரபராதியாகக் காணப்பட்டார். ஆனால் அந்தப் பெண் விடாது மேன்முறையீடு செய்து மறு விசாரணை செய்யப்பட்டதில், இளைஞர் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

ஒரு பெண்ணைக் காதலித்தபின் கைவிட்டதாலும், அவரைத் தான் காதலிக்கவில்லை என்று தொடர்ந்தும் பொய் கூறியதாலும், அந்தப் பெண்ணுக்கு நட்டஈடாக குறிப்பிட்ட தொகைப் பணம் கொடுக்குமாறும், மூன்று ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

நியாயம்தேடி இரண்டு, மூன்று ஆண்டுகளாக அலைந்த பெண்ணுக்கு அன்று நியாயம் கிடைத்தது. உண்மையில் வெற்றி அந்தப் பெண்ணுக்குத்தான். தான் விரும்பவேயில்லை என்று மறுத்ததன்மூலம் அந்தப் பெண்ணை ஊரிலேயே தலைகாட்ட முடியாமல் அவமானப்படுத்திய ஒருவர் உண்மையை ஒப்புக்கொண்டதால் இந்தப் பெண்ணால் தலை நிமிர்ந்து நடக்கமுடிந்தது. தன்னை அவமானப்படுத்தியதற்கு நட்டஈடாகப் பணமும் பெற்றுக்கொண்டார்.

ஆனால் இப்போது அந்தப் பெண்ணோ,

''இவர்களிடம் நான் காசா கேட்டேன்? திருமணம் செய்து தருமாறு கேட்க. அவரைப் பிடித்து அடைத்து வைத்திருக்கிறார்கள்.''

என்று எம்மை ஏசிக்கொண்டிருக்கிறார்.

அந்த இளைஞரால் எத்தனையோ சிரமப்பட்ட பின்னர், அவமானப்படுத்தப்பட்ட பின்னர், தன்னைத் திருமணம் செய்யமாட்டேன் என்று பல தடவை மறுத்த பின்னர் - இவ்வளவும் நடந்தும் ஒரு பெண் தனக்கு அந்த இளைஞரைத் திருமணம் செய்து தருமாறு கேட்டால், இதற்கு யாரால் என்ன செய்யமுடியும்?

**சேர்ந்து வாழ விரும்பாத ஒரு ஆணைத் திருமணம் செய்வதால் என்ன பயன்?**

இவரைப் போலவே இன்னுமொரு பெண்.

தானும் ஒரு இளைஞரும் அன்புறவில் ஈடுபட்டதாகவும், அவருக்கும்வேறொரு பெண்ணுக்கும் திருமணம் நடைபெறப்போவதாகவும் அவர் சொன்னார். அவரைத் தனக்குத் திருமணம் செய்து தருமாறு அல்லது தன்னை வெளிநாட்டுக்குப் போக அனுமதிக்குமாறு கேட்டிருந்தார்.

ஒரு பெண்ணை விரும்பிய ஆண் ஒருவர் அவளையல்லாத, வேறொரு பெண்ணை மணமுடிப்பது அப் பெண்ணுக்கு ஆண் செய்யும் துரோகம். தனக்குத் துரோகம் செய்ய நினைத்தவனுக்குச் சவால்விட்டு,

''நீயில்லாமல் என்னால் வாழமுடியும்''

என்று சிறப்பாக வாழ்வதுதான் பெண்மைக்குப் பெருமை. அதைவிட்டுத் தனக்குத் துரோகம் செய்தாலும் பரவாயில்லை, அந்த ஆணைத்தான் திருமணம் செய்வேன் என்று பிடிவாதம் பிடிப்பது எவ்வளவு மடமைத்தனம்? தனக்குத் தேவையில்லாதவற்றை, தன்னோடு சேராதவற்றை வேண்டாம் என்று விட்டு, தனக்குப் **பொருத்தமானதைத் தேர்ந்தெடுப்பதில் என்ன சிக்கல் ஒருபெண்ணுக்கு?**

அது போகட்டும். தன்னை விரும்பியவன் தன்னை விட்டு வேறொரு பெண்ணை மணப்பது என்பது ஒரு பிரச்சினை. **இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழிவகைகள் உள்ளன. தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனத்திடம் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெறலாம்; அவர்களின் உதவியுடன் அந்த ஆண் மேல் சட்ட நடவடிக்கை எடுக்கலாம்; தனக்குச் செய்த துரோகத்துக்குத் தண்டனை வழங்கலாம்.** இதையெல்லாம் விட்டுவிட்டு வெளிநாட்டுக்குப் போய் தலைமறைவாவதுதான் பிரச்சினைக்குரிய தீர்வா?

இன்னுமொரு பிரச்சினையைப் பார்ப்போம்.

அன்புறவில் ஈடுபட்ட ஒரு பெண்ணும் ஆணும் தம் உறவை வீட்டாரைத் தவிர வேறு யாருக்குமே தெரியப்படுத்தவில்லை. பொது இடங்களில் இருவரும் தேவையற்ற முறையில் பழகுவதோ, கதைப்பதோ கிடையாது. எல்லாமே பெண் வீட்டில்தான். அந்த ஆணின் வீட்டார் அவருக்கு வேறு இடத்தில் திருமணம் பேசி ஒழுங்கு செய்து விட்டனர். திருமணத்துக்கு வருமாறு உறவினர்கள், நண்பர்களுக்கு அறிவித்துமாயிற்று. ஆனால் இந்தப் பெண்ணிடம் அந்த ஆண் இதைப்பற்றி எதுவுமே கதைக்கவில்லை தன் திருமணத்துக்கு வருமாறு தன் நண்பர்களுக்குஅறிவித்துவிட்டு எதுவுமே நடவாததுபோல் இருந்துவிட்டார். அந்தப் பெண்ணுக்கோ ஒன்றுமே செய்ய முடியவில்லை தம் உறவு தமது வீட்டாரைத் தவிர வேறு யாருக்குமே தெரியாத நிலையில், யாரிடமும் போய் தன் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளமுடியாமல் ஒடுங்கிப் போனார். விடயம் தெரியும் போது தன் வீட்டார் உடைந்து போவார்கள் என்று நினைத்தாரோ, வெளியில் எல்லோருக்கும் தெரியவந்தால் தான் தலைநிமிர்ந்து நடக்கமுடியாது என்று நினைத்தாரோ தெரியவில்லை, அலரிக்கொட்டைகளை அரைத்துச் சாப்பிட்டுச் சாவடைந்துவிட்டார்.

எல்லாமே ஒரு நிமிடத்தில் முடிந்துவிட்டது. தனக்குத் தீங்கு செய்தவரை சுதந்திர மனிதனாக சமூகத்தில் நடமாடவிட்டு, தான் மட்டும் செத்துப்போனதால் யாருக்கு என்ன நன்மை கிடைத்தது? ஒரு உயிர் வீணாகப் போனதைவிட வேறென்ன நடந்தது? **தவறு செய்தவருக்குத் தண்டனை வழங்கிவிட்டு தலை நிமிர்ந்து நடப்பதல்லவா அந்தப் பெண்ணுக்குச் சிறப்பு?** ஏன் செய்யவில்லை?

இதைவிட, அந்த ஆணைத் திருமணம் செய்த பெண்ணோ, தன் கணவர் ஒரு பெண்ணுக்குத் துரோகம் செய்தவர் என்று தெரிந்தபின்னரும், அவரோடு கூடி வாழ்கின்றார். தன் கணவர் தவறு செய்திருக்கமாட்டார் என்று வலுவாக நம்புகின்றார். தன்னை விரும்பியவர்மேல் எவ்வளவு தூரம் அன்பு இருந்திருந்தால் ஒரு பெண் தற்கொலை செய்யும் அளவுக்குப் போயிருப்பார் என்பதையோ. ஒரு பெண்ணை ஏமாற்றியவர் தன்னோடு இறுதிவரை நம்பிக்கையுடன் வாழ்வது எந்தளவுக்குச் சாத்தியம் என்பதையோ எண்ணிப் பார்க்கவில்லை. தெரிந்தோ, தெரியாமலோ தன்னால் இன்னொரு பெண்ணின் வாழ்வு பாதிக்கப்பட்டதற்காகவாவது கொதித்திருக்க வேண்டாமா? தன்னை இப்படியொரு நிலைக்கு உள்ளாக்கியவரைத் தண்டித்திருக்க வேண்டாமா? இன்னும் எத்தனை நாட்கள் அமைதி பேணப்போகின்றார்?

நம் பெண்கள் தம்மளவில் பாரிய பாதிப்புகளைச் சந்தித்த பின்னரும் இன்னும் எவ்வளவு காலம் இந்தப் பொறுத்துப் போகும் இயல்பைக் கடைப்பிடிக்கப்போகின்றார்கள்?

தனக்குத் துரோகம் செய்தவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கப்போகின்றார்கள்?

ஊருக்கும் தெரியாமல், யாருக்கும் தெரியாமல் எங்கெங்கோ ஓடி ஒளிக்கப்போ

(5-ம் பக்கம் பார்க்க)

பொதுசன நூ... யாழ்ப்ப... நல்லூர்

# சிறுகதை

# அக்கரைக் கனவுகள்

அம்புலி



இன்றைக்கும் வேளைக்கே எழும்பிவிட்ட களைப்பு கலாவுக்கு. சின்னவன் பள்ளிக்கூடத்தில் போட்டியெண்டு விடியவிடிய மனனம் செய்யத் தொடங்கி விடுவான். அவனுக்கு தேநீர் வைத்துக் கொடுப்பதற்கு எழும்பியதோடு நேரமும் கடகடவென்று போய்விட்டது.

இப்பவெல்லாம் வேளைக்கே விடிந்து விடுவதால் நேரம் கெதியில் போறது மாதிரி இருந்தது கலாவுக்கு. பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் அனுப்பிய பின்பு உடைகளைத் தோய்க்க நினைத்தாள். சுமதியின் பச்சைச் சட்டை சரியான அழுக்காக இருந்தது. அண்மையில்தான் சுமதிக்கு அந்தச் சட்டையை கடையில் வாங்கிக் கொடுத்திருந்தாள். அதைப் பார்க்கும்போதெல்லாம் சிவராசாவுக்குத் தான் சொன்ன வார்த்தைகள் கலாவின் நெஞ்சுக்குள் இறங்கிக் கொள்ளும். ஏன் அப்படிக் கூறினாள்? அவளுக்கே தெரியவில்லை.

சுமதி நெடுக புதுச்சட்டை வாங்கித் தருமாறு கெஞ்ச, பாடசாலை ஆண்டுவிழா நிகழ்வுக்காக அந்தச் சட்டையை வாங்கவேண்டி வந்தது. மிச்சம் பிடிப்பதில் எல்லாம் வாங்க வேண்டும் என்று நினைத்தாலும் ஒவ்வொரு மாதமும் சாமான்கள் வாங்கி முடிந்து போய்விட, கடைசியில் தவம் அக்காதான் கைகொடுத்தாள் சட்டையை வாங்கிவிட்டு சிவராசாவுக்கு வந்து கூறியபோது என்றுமில்லாதபடி துள்ளினான்.

''உமக்கு உழைப்பில மிச்சம் பிடிக்கத் தெரியாது. எப்பிடியோ ஒவ்வொரு மாதமும் ஆரிட்டையாவது கடன் வைச்சிடுவீர்''

பிள்ளைக்குச் சட்டை வாங்கிய சந்தோசம் சிவராசாவின் கொதிப்போடு போய்ச் சேர்ந்துவிட, ஏதோ ஒரு வேகத்தில் பழைய ஞாபகத்தையும் சேர்த்து,

''எல்லாம் உங்களைக் கட்டித்தான்''

என்று கூறிவிட்டாள்.

அதன்பின் அவன் ஒன்றுமே திருப்பிக் கதைக்கவில்லை. மூன்று நாட்களாக முகத்தை நிமிர்ந்து பார்ப்பதைக்கூட விரும்பாதவனாய் நடந்து கொண்டான். அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டுவிட்டாலும்கூட அன்றைய அவளின் சொல்லும், அவனின் அதற்கான மௌனமும் அவளை வாட்டிவிட்டன. பின்பு சமாதானமாகியபோதுதான் அந்தச் சொல்லின் ஆழம் அவனுள் ஏற்படுத்தியிருந்த தாக்கம் கலாவுக்குப் புலப்பட்டது. எப்படித்தான் சண்டை பிடித்தாலும் இப்படி மனதைப் பாதிக்கும்படி கதைப்பதை விட்டுவிட வேண்டும் என்று தான் நினைத்துக்கொண்டாள்.

எந்தப் பிடிவாதமோ, ஏனோ குத்தலான கதையாக அவளுள் வந்துவிடும். தனது ஏக்கமோ, இயலாமையோ, தவம் அக்காவைப்போல வசதியாக வாழவில்லை என்பதாலோ என்றுகூட அவள் இதைப்பற்றி அடிக்கடி நினைப்பதுண்டு. அந்தப் பச்சைச் சட்டையோடு கடன் வாங்குவதை ஓரளவாவது குறைக்கவேண்டும் என்று நினைத்துக் கொள்வாள்.

பிள்ளையார் கோயிலில் பத்துமணிப் பூசைக்கான மணி அடித்து ஓய்ந்தது.

''இன்றைக்கு மறந்திடாமல் கோயிலடிக்கும் போக வேணும். போன வியாழனும் போக வெளிக்கிட்டு வேலைகள் மாறிமாறிவர போகவில்லை.''

உடுப்புகளைக் கொடியில் போட்டுவிட்டு வரும்போது சின்னமணி மாமி கூப்பிட்டாள்.

''பெரிய சருவத்தை ஒருக்காத் தா மோனை. கொஞ்சம் நெல்லவிக்கவேண்டும்''

''புதினங்கள் ஒண்டும் இல்லையோ''

இதைச் சின்னமணிமாமியே தானாகக் கூறும்போது தான் கேட்கத் தேவையில்லை என்பது கலாவுக்குத் தெரியும். இருந்தாலும் ஏதாவது கதைக்கவேண்டும் என்பதற்காகக் கேட்டு வைத்தாள்.

''தவத்தின்ர தங்கச்சிக்காறி மனோன்மணி கொழும்பிலிருந்து வந்திருக்கிறாளாம். தாய்வீட்டைத்தான் நிக்கிறதெண்டு கேள்வி. தவத்துக்கும் வடிவாத் தெரியாதெண்டு சொன்னவள்''

சின்னமணி மாமி அவசரத்தில் போய்விட்டா. அவவுக்குத்தான் தவமக்கா வீட்டுப் புதினம் அத்துப்படி.

தவம் அக்காவை நினைக்க நினைக்க அவளுக்கு இப்போதெல்லாம் பரிதாப உணர்ச்சியே தோன்றும். சின்னமணிமாமியோ அவள் ஏதோ உயரத்தில இருக்கிறது மாதிரிக் கதைத்துக்கொள்வா' கதையோடு கதையாக கலாவையும் குத்திறது மாதிரிக் கதைப்பா. இவள்தான் சிவராசாவை ஓடித்திரிஞ்சு அனுப்பவில்லை என்பதுபோல கண்டித்துக் கொள்வா. காணி, பூமி, காசு இல்லாததையும் கலாவின் அம்மாவையும், சிவராசாவின் இரண்டாயிரத்து ஐநூறையும், சேகரிக்கும் வழி தெரியாத அவளையும் சின்னமணிமாமி பரிதாபமாகவே நினைத்துக் கொள்வதுண்டு. சிவராசாவும் இதைப்பற்றி யோசித்ததாகவோ, முயன்றதாகவோ, அவளுக்கு ஞாபகமில்லை.

தனது தாலிக்கொடியையும் ஒரே ஒரு சங்கிலியையும் தவிர அவளிடம் ஏதுமில்லை என்பதால்தானே யோசிக்கவில்லை என்று நினைத்து, ஒருநாள் அவனிடம் கேட்டபோது அப்படியான எண்ணமே அவனிடம் இல்லாதது கலாவுக்கு வியப்பைத் தந்தது.

சிவராசா வெளியே போயிருந்தால் தானும் தவம் அக்காவைப்போல வசதியாக இருந்திருக்கலாம் என்று முன்பு அவள் அடிக்கடி ஆதங்கப்பட்டதுண்டு. இப்பவெல்லாம் அப்படிப் போகாமலிருந்ததே போதும் என்றிருந்தது அவளுக்கு.

தவமக்காவின் நிலையை நினைக்க கவலைதான் அவளுக்கு வந்தது. பதினாலு வருடமாக திரும்பத் திரும்ப அதே நாட்கள்தான் அவளுக்கு. காலமாற்றத்தையும் வயது முதிர்ச்சியையும் தவிர அதே வாழ்க்கை, அதே வேலைகள்தான். இரண்டு ஆண்களும் ஒரு பொம்பிளைப் பிள்ளையும் இருந்தாலும் தன்னை எந்த வெளி நிகழ்வுகளிலுமே அவள் அதிகம் இணைத்துக்கொள்வதில்லை. சின்னமணிமாமி அவளோடு நல்ல வாரப்பாடு. சந்தையிலிருந்து மரக்கறி வாங்குவதுமுதல் ஊர்ப்புதினம் சொல்லுவதுவரை அவளுக்கு ஒத்தாசையாக இருந்துகொள்வாள். மீன்காரச் சின்னத்தம்பியும் வாசலில் வந்து மீனைக் கொடுத்து விட்டுப் போவதால் அன்றாடம் வெளியே செல்லும் தேவைகள் அவளுக்கு இருப்பதில்லை. வீட்டுக்குத் தேவையான பொருட்களை மாதத்தில் ஒருதரம் மொத்தமாக வாங்கி வைத்து விடுவதோடு, உடை போன்றவற்றிற்காக ரவுணுக்கு பஸ்ஸிலேறிச் சென்று வாங்கிவிட்டு வருவதோடு சரி. செல்லம்மாக்காவும் மாவிடிக்க, தூளிடிக்க என்று வீட்டுக்கே வருவதால் அதிலும் குறையில்லை.

ஆனாலும் திரும்பத் திரும்ப அவளுக்கு அதே நாட்கள் தான். தவமக்காவின் புருஷன் சாறி, சட்டை, துணிமணியென்று அனுப்பியிருந்தாலும் அவள் எல்லாவற்றையும் அள்ளிக்கட்டிக்கொண்டு எங்கும் சென்றதேயில்லை. கோயிலுக்கு ஓரிரு நாள், ஊரில் எங்காவது வீட்டில் விசேடமென்றால் ஆர்ப்பாட்டமில்லாமல் பிள்ளைகளோடு ஒரு முறை போய்வருவதைத்தவிர கொண்டாட்டமாகவே வாழ்ந்ததில்லை.

மூத்தவள் சர்மிலா மூன்று வருடங்களுக்கு முன் பெரிய பிள்ளையானபோதுகூட ஒரே ஒரு பொம்பிளைப் பிள்ளை என்பதாலும், புருஷன் வீடியோ கசற்றிலையாவது பார்க்கலாம் என்பதாலும்தான் ஓரளவு பெரிதாகக் கொண்டாடச் சம்மதித்தாள், அதுகூட பெரிய பாரத்தைத் தனியாகச் சுமந்தது போன்று தவமக்கா கூறிக் கொள்வாள்.

''இவரும் இருந்திருந்தால் இன்னும் வடிவாகச் செய்திருக்கலாம்'',

என்று அடிக்கடி ஆதங்கப்பட்டுக்கொள்வாள். பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஆளுக்கொரு சைக்கிள், ரியூசனென்று படிப்புக்காக காசைக் கட்டுப்படுத்தியதே கிடையாது. இரண்டு பெடியன்களும் அடங்காத குளப்படிக்காரர்களாய் இருந்தது முதல், ஆட்களைக் கண்டால் உள்ளே போய் ஒளிந்து கொள்ளும் மௌனமானவர்களாய் மாறியதுவரை கலாவுக்கு நன்றாக ஞாபகம்.

விரும்பியதை தகப்பன் அனுப்பும் காசில் வாங்கித் தருமாறு அடம் பிடிப்பதும் பக்கத்து வீட்டுப் பெடியன்களுடன் சேர்ந்து பந்தடிப்பதும் தவமக்காவுக்கு முன்பு கவலையையே தோற்றுவிக்கும் நிகழ்வுகளாயிருந்தன. சிவராசாகூட ஒரு முறை

''தகப்பனில்லாமல் பிள்ளைகள் வளருதுகள். ஆர் சொல்லி அடங்கப் போகுதுகள்.''

என்று கூறியது கலாவுக்கு ஞாபமிருக்கிறது. ஆனால் தாயைப் பார்த்துப் பாவப்பட்டோ, பரிதாபப்பட்டோ, வளர்ந்து விட்டதாலோ, என்னவோ அவங்கள் இப்போது நல்ல திருத்தம்.

இப்போதெல்லாம், பிள்ளைகள் யாராவது வெளிக்கிட்டுப் போனாலும் என்ற பயம் அண்மைய காலத்திலிருந்து அவளுக்கு ஏற்பட்டிருப்பது கலாவுக்குத் தெரியும். பொத்திப் பொத்தி வளர்த்து புருஷன் வந்தவுடன் ஒப்படைத்தாலே பெரும் திருப்தி என்றது மாதிரிக் கதைத்துக் கொள்வாள்.

தவமக்காவின் கல்யாணவீடு நடந்தது கலாவுக்கு நல்ல ஞாபகம். அவள் அப்போது படித்துக்கொண்டிருந்தாள். பெரிதாகத்தான் அந்தக் கலியாணத்தைச் செய்து வைத்தார்கள். அதுமுடிந்து நாலரை வருடங்களுக்குப் பின்பு

(9 ஆம் பக்கம் பார்க்க)

# இன்னும் எத்தனை நாள் துயின்றிருப்பாய்

நமது சமூகத்துப் பெண்கள் பிரச்சனைகளை சந்திப்பதற்குக் காரணங்கள் பல. அவற்றுள் சிந்தனைத் தெளிவின்மை, எதையும் ஆய்ந்தோய்ந்து பாராமல் எல்லாவற்றையும் அப்படியே நம்பும் இயல்பு, இனக்கவர்ச்சி என்பவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். நீண்ட காலமாகவே பெண்கள் இந்தப் பிரச்சனைகள் இருந்துவருகின்றன. நமது சமூகம் பெண்கள் விடயத்தில் வைத்திருக்கும் சில கெடுபிடிகளால் பெண்களால் தமது நிலையை மேம்படுத்திக் கொள்ள முடியாமல் இருக்கின்றது. நாலு பேருடன் பேசிப் பழகி, நாலு இடத்துக்குப் போய் வந்து வெளியுலகைப் படிப்பதால் கிடைக்கக் கூடிய அனுபவ அறிவின்மையே பெண்களின் வளர்ச்சிக்குத் தடைபோடுகின்றது.

நம்மிடம் வரும் பல முறைப்பாடுகளைப் பார்க்கும்போது, பெண்கள் சின்னச் சின்ன விடயங்களிலெல்லாம் மிக மோசமான முறையில் ஏமாந்து போவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அண்மையில் நமது நீதிமன்றத்துக்கு வந்து, தீர்ப்பு வழங்கப்பட்ட பெண் ஒருவரின் பிரச்சினையை இங்கே தருகின்றோம்,

கிளிநொச்சியைச் சேர்ந்த அந்தப் பெண்ணுக்கு இப்போதுதான் பத்தொன்பது வயது.

இவர் தனது சகோதரியின் கணவருடன் பாலியல் உறவில் ஈடுபட்டு ஒரு குழந்தைக்குத் தாயாகியிருந்தார்.

''எனக்கு ஏழு அண்ணாமாரும் இரு அக்காமார்களும் இருக்கிறார்கள். எல்லோருக்குமே திருமணமாகிவிட்டது. எனக்கு நேர்மூத்த அக்காவின் கணவருடன்தான் இப்பிரச்சினை ஏற்பட்டது. வீட்டில் நான்தான் கடைசிப் பிள்ளை. சரியான செல்லம். வீட்டு வறுமையால் ஐந்தாம் வகுப்புடன் எனது படிப்பை நிறுத்திவிட்டேன். வீட்டில் இருந்து அம்மாவுடன் வேலைக்குப்போய்வருவேன். அப்பாவுக்கு வயது போய்விட்டதால் அவர் வேலைக்குப் போவதில்லை. சமைத்து வைத்திருப்பார். வேலை முடிந்து போய் நாங்கள் சாப்பிடுவம்.

எனது மூத்த அக்காவும் திருமணமாகிப் போய் கணவருடன் வசித்து வந்தார். ஒருமுறை கடும் மழைகாரணமாக அவர்கள் வசித்த வீடு இடிந்ததால் எங்களுடன் வந்து இருந்தார்கள். அப்போதுதான் எனக்கும், அக்காவின் கணவருக்கும் தொடர்பு உண்டானது. அக்காவின் கணவர் என்னைக் கூட்டிக்கொண்டு வேறு இடத்துக்குப் போனார். மூன்று மாதம்வரை நானும் அவரும் ஒன்றாக இருந்தோம். நான் ஏன் இப்படி அவரோடு போனேன் என்பது பற்றி எனக்கு சரியாகச் சொல்ல முடியவில்லை.

எனக்கு குழந்தையும் உண்டாகிவிட்டது. என்னை வீட்டில் எல்லோரும் தேடியிருக்கிறார்கள். அக்காவின் கணவரை எங்கோ கண்டு, அடித்து விசாரித்து நான் இருந்த இடத்துக்கு வந்துவிட்டார்கள். எம்மைப் பிரித்து வைத்துவிட்டு நீதிமன்றில் வழக்குப் போட்டார்கள்.

முதல் மனைவி இருக்கும்போது என்னுடன் தொடர்பு வைத்ததற்காக குற்றப் பணம் கட்டுமாறும், ரூபா 5,000.00 குற்றப்பணம் அல்லது ஐந்து மாத கட்டாயச் சேவை செய்யுமாறும் எனக்குப் பிறக்கின்ற குழந்தைக்கு தானே தந்தை எனப் பெயர்ப் பதிவு செய்யும்படியும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

குற்றப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, அதன்பின் அவருடன் எதுவிதமான தொடர்புகளும் வைக்கவேண்டாம் என்று எனக்கு அறிவுரை கூறினார்கள். இந்த வழக்கு முடிந்தபின்னர்தான் ஒரு அண்ணனுக்கு திருமணம் நடந்தது. எனக்குப் பிறந்தது ஒரு பெண்பிள்ளை. அந்தப் குழந்தையோடு திருமண வீட்டுக்கு வர வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். ஒருவரும் என்னை ஆதரிக்கவில்லை. பிழை செய்த என்னை மன்னித்து ஏற்கமாட்டோம் எண்டு சொல்லிவிட்டார்கள். அம்மா என்னை ஏற்ற போதுகூட அம்மாவையும் அப்பாவையும் ஏசினார்கள்.''

என்று கூறிவிட்டு கண்ணீர் வடித்தார்.

''அக்காவின் கணவர் விடுதலையாகி வந்ததும் அக்கா,

'இவரோட நான் வாழமாட்டன். அவளையே போகச் சொல்லுங்கோ'

என்று சொல்லிவிட்டார். நான் விதானையாரிடம் போனேன். அவர் கதைத்து ஒழுங்குபடுத்தி என்னை அவருடன் அனுப்பிவிட்டார். ஆனால் அவர் அங்கேயே அக்காவையும் கூட்டி வந்துவிட்டார். நான் சண்டை பிடித்துக் கொண்டு அம்மாவிடம் வந்துவிட்டன். இப்ப அம்மாவுடன் வேலைக்கு போகிறேன். நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 தருவார்கள். எனது குழந்தையும் இடையில் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டது. குற்றப்பணம் வாங்குவதற்காக முன்னர் நீதிமன்றத்துக்குப் போனேன். ஆனால் பிள்ளையே செத்தாப்பிறகு அவரின் பணம் யாருக்கு வேணும்? பெற்ற பிள்ளைக்கு அவர்தான் தந்தை என்று எல்லோருக்கும் தெரியும்தானே? அதனால் அந்தப் பணம் தேவையில்லை என்று விட்டுவிட்டேன். என் கை இருக்கும்வரை உழைத்துச் சாப்பிடுவேன். என் அண்ணா ஒரு கலியாணம் எனக்குப் பேசிவதார். அவர்தன் மனைவியைப் பிரிந்து வாழுகின்றவராம் நான் மறுத்துவிட்டேன். ஒரு முறை பட்டதுபோதும். நாளைக்கு அவரின் மனைவி வந்து நீதிமன்றில் ஏறினால், நான் என்ன செய்வது? நான் அம்மா, அப்பாவுடனேயே இருப்பேன். அவர்களுக்குப் பிறகு பாசமாக இருக்கின்ற அண்ணா, அண்ணியிடம் போய் விடுவேன். கலியாணம் என்பதை நினைக்கவே வெறுப்பாக இருக்கின்றது''

என்றார்

ஒரு பத்தொன்பது வயதுப் பெண், வாழ்க்கையே வெறுத்துப்போன நிலையில் உரையாடினார்.

பெண்களின் பிரச்சினைகள் என்றாலே ஆழமாகப் பார்க்கப்படவேண்டியவை. அதிலும் இதுபோன்ற வாழ்க்கைப் பிரச்சினைகளில் அவசரப்பட்டு (யாருமே) முடிவுகளை எடுத்துவிட முடியாது. **தன் அறியாத்தனத்தால் ஒரு தவறைச் செய்துவிட்டு, ஏமாந்துபோய் நிற்கும் பெண்ணுக்கு ஆதரவு கொடுக்காமல் உறவினர்களும் அவரை வெறுத்து, ஒதுக்கி, கேலிப் பேச்சுகள் பேசுவது பண்பான செயலல்ல.** ஒரு பெண்ணைத் திடமான முடிவெடுக்கும்வகையில் அவளின் ஆற்றலை வளர்க்காது, அதற்குரிய வாய்ப்புகளை மறுத்து, அவளைப் பலவீனமானவளாக்கிய சமூகந்தான் இதற்குப் பொறுப்பு. அப்படியிருக்கையில் எப்படி ஒரு பெண்ணின்மேலேயே முழுக்குற்றத்தையும் சுமத்துவது?

எல்லோருடைய வெறுப்புக்களையும் சுமந்த நிலையில் யாருக்கும் உலகத்தின் மேலேயே வெறுப்பு வருவது இயல்புதான். இது பெற்றோரினதும் உறவினரினதும் அன்புறவால் காலப்போக்கில் மாற்றப்படவேண்டும் இவரின் பிரச்சினை போன்றே, தம் சகோதரிகளின் கணவர்களுடனோ, அல்லது வேறு யாரேனும் ஏற்கனவே மணம் புரிந்த நபர்களுடனோ உறவு கொண்டு, தாய்மையடைந்த பெண்கள் பலபேர். அவர்களுக்குள் நீதிமன்றத்தின் படியேறி வந்து நீதிகேட்டவர்களைவிட, வீதியோரங்களில் கைவிட்டவர்களும் பலர்.

இதுபோன்ற விடயங்களில் நாம் ஒன்றைத் தெளிவாகக் கண்டுகொள்ளலாம். அது என்னவென்றால் இந்தப் பிரச்சினைகளில் சம்பந்தப்படுகின்ற ஆண்கள், 'நாங்கள் ஆண்கள்' என்று கம்பீரமாக உலாவித் திரிய, பெண்கள்மட்டும்தான் உடல், உளரீதியான பாரிய பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றார்கள் என்பதுதான். எனவே இந்த விடயங்களில் பெண்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலுமே தம்மை தற்காத்துக்கொள்ள முனையவேண்டும்.

இதில் பெற்றோருக்கும் பெரும் பங்கு இருக்கின்றது. தம் பெண்பிள்ளைகளைச் சிறுவயதிலிருந்தே தன்னம்பிக்கை கொண்டவர்களாக வளர்ப்பதில் அக்கறை எடுக்கவேண்டும். ஒரு பெண் தான் சம்பந்தப்பட்ட விடயங்களிலாவது திடமான முடிவு எடுக்கக்கூடிய வகையில் வளர்க்கப்பட வேண்டும். மேலே நாம் உதாரணத்துக்கு எடுத்துக்கொண்ட கதையில் வரும் பெண் முதலில் அறியாத்தனத்தால் தவறு செய்து, நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்த பின்னரும் தன் தவறை உணராமல் தன் சகோதரியின் கணவருடனேயே போயிருந்தார். ஆனால் அதன்பின் இவர் சந்தித்த பல அனுபவங்கள் அவரை இன்று மாற்றியுள்ளது. குற்றப்பணம்கூட வேண்டாம், என்னால் உழைத்து வாழமுடியும் என்ற நம்பிக்கை இன்று அவருக்கு ஏற்பட்டிருக்கின்றது. இந்த நம்பிக்கையை ஒவ்வொரு பெண்ணுக்கும் இளம் வயதிலே கொண்டுவர வேண்டும்; கொண்டு வரவும் முடியும் பெற்றோர்கள் நினைத்தால்.

அதேநேரம் தன் கணவர் தன்னுடைய தங்கையுடன் தொடர்பு வைத்திருப்பது தெரிந்தும், இறுதியில் தன் கணவர்தான் வேண்டும் என்று அவரிடம் போன தமக்கையின் நிலை பலவீனமாக இருக்கின்றது. தன்னை விட்டு வேறு பெண்ணிடம் போன கணவரை விட்டு விலகாமல், அவருடனேயே வாழ விரும்பும் அக்காமார்களும் இங்கு ஏராளம். இவர்களுக்குத் தெளிவான மன நிலையை, திடமாக முடிவெடுக்கும் மனநிலையை ஏற்படுத்த வேண்டியது பெற்றோரின் கடமை.

**ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பெண் பிள்ளைகளுடன் நட்புடன் பழகி, உணர்வுகளைப் பகிர்ந்து அவர்களை நல்வழிப்படுத்த தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.**

-பொன்னிலா

---

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

**எது எப்படியோ? வழமைபோல் இந்தப் பெண்களின் பிரச்சினைகளும் சுவரில் அடிக்கப்பட்ட பந்துபோல் திரும்பி வராமல் உரிய முறையில், உரிய இடத்தில் தீர்க்கப்படுவதையே நாம் விரும்புகின்றோம்,**

பெரியளவில் கல்வியறிவு இல்லாவிட்டாலும் உலக அனுபவம் என்கின்ற பேரறிவு அவர்களிடம் தாராளமாக இருக்கின்றது. அந்த அறிவின் பலத்துடன் சமூகத்தின் மத்தியில் பணிபுரியும் இந்தப் பெண்களை மதித்து, அவர்களுக்குரிய கௌரவத்தைக் கொடுக்கும் கடமை சமூகத்திலுள்ள அனைவருக்கும் உரியதல்லவா?

-பூமணி-

# வெற்றிகளை நோக்கிச் செல்லும் வீராங்கனைகள்

விளையாட்டு என்பது மனிதனின் வாழ்வோடு இணைந்த ஒரு பகுதி. வளர்ந்துவரும் புதிய உலகிலே ஓய்வேயில்லாத தமது உழைப்புக்கு நடுவில் தம் மன உளைச்சலைப்போக்கி புத்துணர்ச்சியைப் பெறுவதற்கு மனிதர் விளையாட்டுக்களையே அதிகம் நாடுகின்றனர். முன்னரைப்போல் அல்லாமல் இப்போது எல்லா நாடுகளுமே விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டுகின்றன. தத்தம் நாட்டு வீராங்கனைகளையும் வீரர்களையும் 'ஒலிம்பிக்' வரை அனுப்பி வைப்பதில் அதிகளவு அக்கறை காட்டுகின்றன. இரவும் பகலும் போரையும் அணு ஆயுத உற்பத்தியையும் விண்வெளி ஆய்வுகளையும் சிந்திக்கும் நாடுகள்கூட விளையாட்டிலும் தீவிர கவனம் செலுத்துகின்றன. பெண்கள்-ஆண்கள் என்ற வேறுபாடின்றி எல்லோரையும் விளையாட்டில் ஊக்குவிக்கின்றன.

ஏறத்தாழ கடந்த பத்து வருடங்களில் உலகளாவியரீதியில் பெண்களுக்கான டெனிஸ் விளையாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருவதும், மார்ட்டினா நவ்ரத்திலோவா ஸ்டெபி கிராஃப், மோனிகா செலஸ் போன்றோர் உலகளாவியரீதியில் வெற்றிவாகை சூடியதும் நாமெல்லோரும் அறிந்த விடயங்கள்தான். இவையெல்லாம் அடுத்த நாட்டு விடயங்கள். இனி, நம் நாட்டில் விளையாட்டுக்களில் பெண்களின் ஈடுபாடு, விளையாடுவதற்குரிய வாய்ப்புகள், ஊக்குவிப்புகள் பற்றிப் பார்ப்போம்.

வலைப்பந்தாட்டம் பெண்களிடையே பாடசாலை மட்டங்களில் பரவலாக உள்ளது. வலைப்பந்தாட்டதில் குறிப்பிட்ட சில அணிகள் தொடர்ச்சியாகத் தம் நிலையினைப் பேணிவருகின்றன. அவற்றிலே தெல்லிப்பளை கிறாஸ்கொப்பர்ஸ், இளவாலை யுத்காமல், அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் என்பவற்றைப் பிரதானமாகக் குறிப்பிடலாம். இவை பாடசாலைகள்சாராத தனியார் விளையாட்டுக் கழகங்களின் அணிகள். இவற்றைவிட பாடசாலைகளும் தத்தமது அணிகளின் விளையாடும் வலுவை மிகவும் திறமையாக வளர்த்துவருகின்றன.

அண்மையில் 'ஈழநாதம்' நிறுவனம் தனது ஆண்டு நிறைவைக் கொண்டாடியபோது நடாத்திய வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற கிறாஸ்கொப்பர்ஸ் பெண்கள் அணியினரை நாம் சந்தித்தோம்.

1948-ம் ஆண்டு கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் 1986 ல் ஏறத்தாழ பத்து பெண்கள் முதன்முதல் இணைந்து விளையாடத்தொடங்கினர். ஆரம்ப காலத்தில் பெண்கள் இக்கழகத்தில் இணைந்த போது, எங்களுடைய சமுதாயத்தில், பலவிதமான கருத்துக்கள், எதிர்ப்புக்களை அந்த பெண்கள் சந்தித்தார்கள். சமுதாய அழுத்தங்களை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு தொடர்ந்தும் விளையாடினார்கள். இவர்கள் மகாஜனாக்கல்லூரியில் மாணவிகளாக இருந்தபோதுதான் விளையாட்டுக் கழகத்தில் இணைந்துகொண்டார்கள். கழகத்தில் இணையும் போதே வலைப்பந்தாட்டம் பற்றிய அறிவு ஓரளவுக்கு இருந்தது பாடசாலை மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளைப் பார்க்கும் வாய்ப்பு இவர்களுக்கு இருந்தது. அத்துடன் வேறு நாடுகளில் நடைபெற்ற போட்டிகளைத் தொலைக்காட்சிப் பெட்டியில் போட்டுக் காண்பித்தார்கள். நேரடியான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இவ்வாறு கிறாஸ்கொப்பர்ஸ் பெண்கள் அணி மிகப் பலமாக வளர்க்கப்படலாயிற்று.

ஆரம்பத்தில் இவர்கள் பாடசாலை மட்டத்தில் பல நெருக்குதல்களை எதிர்கொண்டனர். பாடசாலை ஆசிரியர்கள்கூட இவர்கள் விளையாடக்கூடாது என்று எதிர்ப்புக் காட்டினார்கள். விளையாடிக்கொண்டு இருக்கும்போது குறுக்கே கம்பங்களை பிடுங்கி வைப்பார்கள். விசில் அடித்து வேறுபக்கம் பந்தைக் கொடுப்பார்கள். பயிற்சி செய்வதற்குரிய மைதானம்கூட இல்லாமல் ஒரு வளவினுள்தான் போய் பயிற்சி எடுத்து தங்களை விளையாட்டு வீராங்கனைகளாக வளர்த்துக்கொண்டார்கள். எவ்வளவோ வெற்றிகளைக் குவித்துள்ள இன்றைய நிலையில்கூட தாங்கள் வித்தியாசமாகப் பார்க்கப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். விளையாட்டுக்காக காற்சட்டை போட்டால், அது பெண்களுக்கு அழகல்ல என்று எதிர்த்ததும், வீதியால் செல்லும்போது ஆண்கள் தேவையற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியதுமாகப் பல வகைகளிலும் இவர்கள் எதிர்ப்புகளைச் சந்தித்தார்கள்

''எப்படி எவர் எதிர்ப்பு தெரிவித்தாலும் நாங்கள் உறுதியுடன் விளையாடுகின்றோம். பெற்றோரின் முழுச் சம்மதம் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றது, அவர்கள் எமக்கு தடையாக இருந்ததில்லை. சமுதாயம் ஒருகாலத்தில் தடையாக இருந்தது. இப்போது பெரியளவில் இல்லை.

பயிற்சி எடுத்து விட்டு வீட்டுக்கு சென்று படித்தால்தான் எங்களுக்கு படிப்பு ஏறுகிறது. அப்படியில்லாவிட்டால் துப்பரவாக பாடங்களில் கவனமில்லாமல் இருக்கும். விளையாட்டால் படிப்பு பாதிக்கப்படுகிறது என்று மற்றவர்களின் கணிப்பீடு இருக்கலாம். எங்களுக்கு விளையாடிக் கொண்டே படித்தால்தான் படிப்பு ஏறுகின்றது. இந்த விளையாட்டுக்கழகத்தில் இருந்து பல பேர் பல்கலைக்கழகத்துக்கும் எடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் இதற்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றார்கள்.

நாங்கள் முன்னேறவேண்டும், விளையாட்டுச்கழத்தை வளர்க்க வேண்டும் என்று விளையாட்டிலேயே ஒன்றிட்டபோய்விட்டோம். நாங்கள் விளையாட்டுக்களில் சேரும்போது சிறு பிள்ளைகளாகத்தான் இருந்தோம். இன்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு வளர்ந்திருக்கின்றோம். விளையாடும்போது நாங்கள் வெல்லவேண்டும் என்ற வேகம்வரும். அந்த வேகத்தில் இன்றும் நாங்கள் விளையாடிக் கொண்டிருக்கின்றோம். முன்பு எம்மை ஒதுக்கிவைத்தவர்கள் எல்லாம் இன்று எமக்கு முன்னுரிமை தருகின்றனர். ஆனால் விளையாடிக் கொண்டிருக்கும்போது சிலரின் கேலிச் சிரிப்புகள், அறுவைகளை நாம் இன்றும் சந்திக்க வேண்டியுள்ளது. அவர்களையும் எதிர்த்து விளையாடுகிறோம். நாங்கள் முதன் முதல் பயிற்சிக் களத்தில் இறங்கிய போது எங்களுக்கென்றொரு உற்சாகம் இருந்தது. பின் எங்களுடைய பெற்றோர், சகோதரர்கள் விளையாட்டுடன் ஒன்றிப்போனதும் ஊக்குவித்ததும் எம்மை முன்னோக்கி நகர்த்தியது'',

என்று சொன்னார்கள்.

இவர்களின் வெற்றிகளை பற்றி கேட்டபோது,

முதன்முதலில் இந்த அணி தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியுடன் (1986ம் ஆண்டு) விளையாடியது. 1988ம் ஆண்டு வரைக்கும் பெரியளவில் வெற்றி என்று வந்ததில்லை. 1988ம்ஆண்டுக்குப் பின் வெற்றிக்கிண்ணங்களை அடிக்கின்ற அளவுக்கு முன்னேற்றகரமாக செயற்பட்டது. 1990ம் ஆண்டுக்குப் பின் வெற்றிக் கேடயங்களைத் தட்டிச் சென்றது. முதல் முதலில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடனான போட்டியில் தான் 1991 தெல்லிப்பளை டிவிசன் கிளப்புடன் விளையாடி வென்றது. 1992 செவிப்புலனற்ற அரியாலை விளையாட்டுக்கழகம், புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் 1990 நல்லூர் டிவிசன், அரியாலையை வென்று கேடயங்களைத் தட்டிச் சென்றது. போன வருடம் பருத்தித்துறை அபிவிருத்திக் கழகத்துடன் விளையாடி வெல்லவில்லை. இருந்தாலும் இனிவரும் ஆட்டங்களில் நாங்கள் வெல்லுவோம் என்ற ஒரு எதிர்பார்ப்புடன் கூறிக்கொண்டிருந்தார்கள். ''இவ் ஆண்டு ஈழநாதம் சுற்றுக் கேடயப்போட்டியில் எங்களுடைய அணி வென்றது. எங்களுடைய அயராத பயிற்சியும், விளையாட்டு ரசிகர்களின் ஊக்குவிப்புமே எங்களை முன்னுக்குக் கொண்டுவந்தது அன்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைக்...

சிவசுப்பிரமணியம் சவூதிக்குப் போனவர்தான். இன்னமும் ஒருமுறை கூட வந்துபோகவில்லை. கடைசிப் பெடியன் ரூபன் அவர் போகும்போது ஆறுமாதக் குழந்தை. அப்பாவின் முகத்தை அவனுக்கு படத்தில் மட்டும்தான் தெரியும் என்று சொல்லுவான். ஒவ்வொருமுறையும் அவர் இங்குவர முயன்றபோதெல்லாம் பிரச்சனை அது, இது என்று தள்ளிப்போய்க்கொண்டே இருந்தது. தொண்ணூறில் வரவெளிக்கிட்டபோது கோட்டைப் பிரச்சனை தொடங்கிவிட்டதால் அவர் வருவதும் இடை நிறுத்தப்பட்டது. அப்பா வரப்போகிறார் என்று கடைசியாக ரூபன் சொல்லியும் ஒருவருடமாகிவிட்டது. கிளாலிப் பிரச்சனையோடு அதுவும் சரி. இப்போதெல்லாம் ரூபன் அதைப் பற்றியே எண்ணுவதுமில்லை. கதைப்பதுமில்லை. பாவம் தவமக்கா! வாழ்க்கையில் பிள்ளைகளின் வளர்ப்பைத்தவிர எதுவுமே தெரியாமல் ஒதுங்கியே வாழ்ந்தாள். மாதம் தவறாமல் அவர் அனுப்பும் காசையும் பொருட்களையும், போட்டோவையும் தவிர பதினான்கு வருடங்களாக அவளுக்கு எதுவுமே சந்தோசமானவைகளாக இருந்ததில்லை.

கலாவும் தவமக்காவீட்டு அல்பங்கள் எல்லாவற்றையும் பார்த்திருக்கிறாள். ஆனால் அந்தச் சிவப்பு நிற ரோஜாப் பூக்கள் கொண்ட அல்பத்தைத்தான் தவமக்கா அடிக்கடி எடுத்துப்பார்த்துக்கொள்வாள். அந்த அல்பத்தில் தவமக்கா தன்னுடைய திருமணப்படங்களையும், தானும் புருஷனும் பிள்ளைகளோடு முன்பு எடுத்த படங்களையுமே போட்டு வைத்திருந்தாள். அதையேதான் அடிக்கடி பார்த்துக் கொள்வாள். முன்பு வடிவாகவிருந்த சிவசுப்பிரமணியம் அண்ணரின் படங்களில் இப்போது தலையில் வழுக்கை சிறிது ஏற்பட்டிருப்பதும் கலாவுக்குத் தெரியும்.

சின்னமணிமாமி மட்டும் தவமக்கா சந்தோசமாக, நல்ல வசதியான வாழ்வு வாழ்ந்து வருவதாக நினைத்துக் கொள்வாள். தனது மருமகன்-கௌரியின் புருஷனுக்கு-இப்படி ஒரு வெளிநாட்டு வாழ்வு கிடைக்கவில்லையே என்பது அவளின் அந்தரிப்பு.

சின்னத்தம்பியின் சைக்கிள் மணியும் அவன் கூப்பிடும் ஒலியும் கேட்டது. தவமக்கா இப்ப மீன் வாங்குவாள் என்று கலா நினைத்துக் கொண்டாள்.

அடுப்பில் கொதித்த கத்தரிக்காய் குழம்பை இறக்கி விட்டு கேத்திலை வைத்து வெளியே வந்தபோது நேரம் 11-00 காட்டியது. தூள் அரைப்பதற்கான ஆயத்தத்தைச் செய்து மாட்டுத்தாள் பையில் போட்டு வைக்கவும் சிவராசா கதவைத் திறந்து வரும் சத்தம் கேட்டது.

இன்று மில்லுக்குப் போகவேணும் என்பதற்காக 12-40 இற்கே வந்திருந்தான்.

''சாப்பிட்டாப்பிறகு போங்கோவன்''

''இல்லை. இதை அரைச்சுக் கொணந்திட்டு ஒருக்கா துரை வீட்டை போகவேணும், வாட்டப்பம் பிழையாம், வந்து ஒருக்கா பார்க்கச் சொன்னவன். பின்னேரம் கோயிலுக்குப் போறீரோ?''

''ஓமப்பா. பிள்ளைகளும் வருங்கள். திறப்பு வைக்கிற இடத்திலை வச்சிட்டுப்போறன். தேடாதயுங்கோ''

''இல்லை. இண்டைக்கு நாலு மணியோட கடைபூட்டு. நானும் வாறன். நிண்டு கொள்ளும்''.

வறுத்தமிளகாயைக் கட்டிக்கொண்டு சிவராசா கேற்றைத்தாண்டிப்போவது தெரிந்தது. பின்னேரம் அவனும் தங்களுடன் கோயிலுக்கு வருவதாகக் கூறியது சந்தோசமாக இருந்தது.

கடைசியாக சிவராசாவோடு சென்று ரவுணில் எடுத்த நீலநிற சாறியைக் கட்டிக்கொண்டு, தலையில் சிவப்பு ரோசாவையும் சொருகிக்கொண்டு கண்ணாடியில் நின்று பார்த்த கலாவுக்கு தான் இன்னமும் இளமையாகவே இருப்பதுபோல இருந்தது.

வெளிக்கிட்டு கேற்றைப் பூட்ட ஆயத்தமானபோது சுமி பூ வைத்த பாக்கை விட்டுவிட்டு வந்துவிட்டேன் என்று சொல்லி ஓடிப்போய் எடுத்து வந்தாள். சுமதியும் சுந்தரும் துள்ளித் துள்ளி ஒழுங்கை முகப்புவரை ஓடிவிட்டார்கள்

சுமியின் கையிலிருந்த தேங்காயையும் பூ பாக்கையும் வாங்கிக்கொண்டு சிவராசா கலாவை ஒரு முறை உற்றுப் பார்த்தான். அவனுக்கும் கலா அழகாகத் தோன்றியிருக்க வேண்டும்.

கேற்றைப் பூட்டி விட்டு ஒழுங்கைக்குள்ளால் வீதியில் ஏறியபோது தவமக்கா மகளை ரியூசனுக்கு கேற்றைத் திறந்து வழியனுப்பிக்கொண்டிருந்தாள். தவமக்காவைப் பார்த்துச் சிரித்து,

''கோயிலுக்கு ஒருக்காப் போட்டுவாறம்''

என்று சொல்லியவாறே நடந்தவளுக்கு தவமக்காவின் மலர்ந்த சிரிப்பு அழகாயிருந்தாலும், அந்த நீண்ட கண்களுக்குள்ளே படிந்துபோன தவிப்பு நெஞ்சை என்னவோ செய்தது.

பாவம் தவமக்கா. பதினாலு வருடங்களாகத் தனிமையிலேயே கழித்துவிட்ட வாழ்வுத் துயரத்தை யாரிடம் கூறுவாள்? அவளின் தவிப்பை கலா நன்றாகவே தெரிந்து கொண்டாலும், எப்படி அவளுக்கு ஆறுதல் கூறமுடியும்?

குழந்தை, குட்டிகளோடு சண்டை, சச்சரவு என்றாலும் ஒன்றாயிருக்கும் இளசுகளைப் பார்க்கும்போது அவளும் ஏங்குவது நியாயந்தானே.

''என்ன யோசனையோட வாறீர்''

சிவராசா கேட்டான்.

''ஒன்றுமில்லை''

என்றவாறு திரும்பித் தவமக்கா வீட்டுப்படலையைப் பார்த்தவளுக்கு, இன்னும் அதே ஏக்கப் பார்வையுடன் தவமக்கா இவர்களையே பார்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது.

ஒன்று கடந்து, இரண்டு கடந்து,
மூன்றாவதும் இப்போது
முழங்கத் தொடங்கிவிட்டது.
முன்னயதைவிட விரிந்த பாதையிது.
ஒடுக்கமான பாதைக்குள்ளே
எத்தனை நாள்
ஓடி விளையாட முடியும்?
காலை விரித்து அகல நடந்தால்தான்
இந்த நிலம்
எமக்கானதாக முடியும்.

முன்னாலும் பின்னாலும் பக்கத்திலும்
கறையான் புற்றுக்கள்.
ஒன்றிலிருந்து புறப்பட்டால்
வீட்டுப் படலை வெகு அருகில்.

என்ன செய்வோம்?
எல்லாருக்காகவும்தானே நாங்கள்
விழித்திருக்க வேண்டும்?
மண்டைதீவையும் பலாலியையும்
பூநகரியையும் ஆனையிறவையும் தாண்டி
அப்பாலும் எதிரி உள்ளானே!



# தேர்வு உங்களுக்கானதே!

கூவிக்கொண்டு வரும் எறிகும்கணைக்
குதறவரும் குண்டுகட்கும் பயந்து
அப்புவும் ஆச்சியும்
குழந்தை குட்டியும் ஓடலாம்.
எங்களூர் இளைஞர்களையும்
ஏன் ஒளித்து வைக்கவேண்டும்?
எங்கிருந்தோ
கால்கடுக்க நடை நடந்து
அகலவிரிந்த பாதை வழியே,
எங்கள் வீதிகளால் நடந்து,
எல்லைகளில் கண் விழித்தபடி
தென்தமிழீழத்துச் சொந்தமும்தானே
'சென்றி' யில் நிற்கிறது.

தந்தையெங்கோ! தாயெங்கோ!
விழுந்தாலும் வீரச்சாவுக் கடமைகளில்
தோழர்களன்றி, தெரிந்தவர்கள்
யாருமில்லை.

குண்டு பற்றி - எதிரி
குறிவைத்த இடத்தை காப்பதற்காய்
விழுந்துபோன கதையைத் தாங்கிய
செய்தித்தாள்கள்மட்டும்
விடிகாலைப்பொழுதுகளில்
விற்பனையாகின்றன.

குடாநாட்டின் இரவுகளுக்காய்
கொளுத்தப்படும் தென்தமிழீழத்தை
நெஞ்சிலே நினைத்து
அதை மீட்டெடுக்கும்வரை
இறப்பதை விரும்பாத
அவர்கள்தானே எம்மருகில் நிற்கின்றார்கள்?

இன்னமும் வெளிச்ச இரவுகளை
கனவுகளில் நினைத்துக்கொண்டு
எப்படித் தம்பிகளும் தங்கைகளும்
இங்கே உறங்குகின்றார்கள்?

கடலையும் வானத்தையும்
நாங்கள் கைகளிலெடுத்தபின்பு
தமிழ் நாட்டுச் சோதரருக்கே
புலிகள் தமிழீழம் பெற்றுவிடுவதற்கான
நம்பிக்கை.
இன்னமும் நாங்கள்
"பாய்களைத் தட்டு,
படுக்கையை விட்டெறி,
பக்கத்துவீடுவரை பகைவன் வந்துவிட்டான்"
என்று பள்ளி எழுச்சி பாடியும்,
கண்களை மூடியிருப்பவர்களை
என்ன செய்ய?

நரைத்த தலைகளும்
தோளில் சுமையேற்றிக் கொண்டு
எமக்குப் பலமாக நடக்கின்றபோது,
விழுந்து நொருங்கும் விமானங்களை
வீதிகளில் பார்த்து
விழுந்தடித்து வந்து
பார்த்துவிட்டுப் போவதோடு மட்டுமோ
பங்களிப்புச் செய்வார்கள்?

ஊர்வலம் போக,
இருமருங்கும் நின்றுவிட்டு,
ஆளரவமற்ற பாதையாலே
வீடு சென்று படுக்கின்ற
பேர்வழிகளோ இவர்கள்?

அடுத்த வீட்டுத் தங்கச்சியும்
அயல்வீட்டுத் தம்பிகளும்
வீதிகளின் பெயர்களாக
மாறிவிட்டபோது,
எப்படி வீட்டுக்குள் இவர்கள்மட்டும்
இருந்து கொள்வார்கள்?

நாங்கள்
அகல நடக்கத் தொடங்கிவிட்டோம்.
இப்போது வேலிகளைத்தாண்டி
வெளியே வந்தால்தான்
வீட்டுக்கும் உறவுக்கும்
காவல் போடமுடியும்.

சும்மா வந்து உடலில் பட்டு
உயிர் குடிக்கும் குண்டுக்காவா
அதுநாள் வரை வாழவேண்டும்?
பேரினவாதப் பேய்பிடித்த
பிக்குகளும்
வெட்டரிவாள் தூக்கிவிட்டபோது.
இன்னும் தலைவாரத் தெரியாத
சின்னப் பாலகராய்
தங்கள் பிள்ளைகளை
ஏன் நினைத்துக்கொள்கின்றார்கள்?

இப்படியே இருந்தால்
இழப்பைத்தவிர ஒன்றையும் அறிய
மாட்டோம்.
எமக்குள்ளே இடைவெளி குறையட்டும்.
எழும்பினால் எல்லாரும் நிம்மதியாய்
உறங்கலாம்.
இல்லையெனில் இல்லாமலும் போகலாம்.
தேர்வு செய்தல் உங்களுக்கானது.

★..............★

-அணங்கு-

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்